# வலு

யூலை - செப்ரெம்பர் 2018 காலாண்டிதழ் இதழ் - 19

மாற்றுத்திறனாளிகள் தொடர்பான தகவல்களைத் தாங்கி வெளிவரும் காலாண்டுச் சஞ்சிகை

ரூபா 100/=

ISSN : 2513 - 2989
ISBN : 978 - 955 - 23 - 0019 - 3

05 இல்லையென்றால் விடுவேனா?
33 முற்றத்து மல்லிகை





ISSN 2513-2989

வெளியீடு :
கருவி மாற்றுத்திறனாளிகளின் சமூகவள நிலையம்

# இயங்கா நிலை உடையோர்க்கான

# மாதம் ஒரு பொதி




- கருவி நடைமுறைப்படுத்திவரும் நீண்ட காலச் செயற் திட்டங்களில் முதன்மையானதொன்று.



- ஒரு வேளை உணவை வழங்குதலைக் காட்டிலும் ஒரு குடும்பம் ஒரு கிழமைக்கேனும் திருப்தியான வகையில் நிறை உணவைப் பெற்றுக் கொள்ளும் வகையில் இந்தச் செயற்திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

- இந்தச் செயற்திட்டத்தில் மிகவும் நலிவுற்ற நிலையிலுள்ள மாற்றுத்திறனாளிகளைக் கொண்ட குடும்பங்கள் உள்வாங்கப் படுகின்றன.



- தற்போது 50 குடும்பங்கள் இதற்காகத் தேர்வு செய்யப் பட்டுள்ளன. இக் குடும்பங்களில் 20 குடும்பங்களுக்கு நிரந்தரமான முறையிலும் ஏனைய 30 குடும்பங்களுக் குச் சுழற்சி முறையிலும் வழங்கப்படுகின்றது.

- கொடையாளர்கள் தாமாக மனமுவந்து குறித்த செயற் திட்டத்திற்குப் பங்களிப்புச் செய்கின்றனர். மாதம் லட்சத் துக்கு மேற்பட்ட நிதி செலவிடப்படுகிறது. கருவி நிறுவனத்தை ஒரு தளமாகக் கொண்டு பலர் இத் திட்டத்தின் மூலம் பயனடைந்து வருகின்றனர்.







KARUVI - CENTRE FOR SOCIAL RESOURSE OF DIFFERENTLY ABLED
LET'S WIN THE WORLD WITH DIFFERENT ABILITIES

ISSN : 2513 - 2989 ISBN : 978 – 955 – 23 – 0019 – 3

# வலு

இலவசப் பிரதி
கருவி - வலு

யூலை – ஆகஸ்ட் 2018 காலாண்டிதழ் இதழ் – 19

மாற்றுத்திறனாளிகள் தொடர்பான தகவல்களைத் தாங்கி
வெளிவரும் காலாண்டுச் சஞ்சிகை

**பிரதம ஆசிரியர்**

திரு. க. தர்மசேகரம்

**நிர்வாக ஆசிரியர்**

திரு. நா. கீதா கிருஷ்ணன்.
karuvivalu@gmail.com
Tel : 076 638 5563

**ஆசிரியர் குழு**

திரு. செ. சசிராஜ்.
திரு. ச.க. தேவதாசன்
திரு. செ. பிரிந்தாபரன்
செல்வி. சு. கானப்பிரியா

**இதழ் குழு ஆலோசகர், வடிவமைப்பு**

திரு. கணபதி சர்வானந்தா

**வெளியீடு**

**கருவி மாற்றுத்திறனாளிகளின்**
**சமூகவள நிலையம்**
இல. 1166 / 15, அருளம்பலம் ஒழுங்கை,
நல்லூர் வடக்கு,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 021 205 4224

## பொருளடக்கம்

எண்ணக்கிண்ணம் – கவிதை - 02

புதிய பார்வை - 03

கவிதை – உலகம் - 04
நாளைய விடியலின் வழியாவோம்

வலிகளை உரமாக்கி எழுந்த உலக
விருட்சங்கள் - 05
ஏ.ஜே. ஞானேந்திரன்

வலைவெளி ஓட்டிசம் (Autism) - 09
பாலபாரதி

செய்தி சாரம் - 11

தசரசம் - 14

எழுதுங்கள் வெல்லுங்கள் - 28

முற்றத்து மல்லிகை - 30

வலுவிடம் கேளுங்கள் - 37

சிறுகதை
நன்றி சொல்ல உனக்கு
வார்த்தையில்லை எனக்கு - 38

வலு தரும் ஜோதிடம் - 42
V.A. சிவராசா



# எண்ணக்கிண்ணம்

அங்கவீனர் என்றும் மாற்றுத்திறனாளி என்றும்
பற்பல பெயர் உனக்கு சமுதாயநதனிலே-மனிதா
எங்களாலும் முடியும் எனும் எண்ணத்தினைக் கொண்டு
தற்துணிவாய் பூவுலகில் மானிடனே நீ எழு!

## மனிதா
## மனதினை மாற்று

ஊனம் உனக்குத் தடையல்ல-அறிவு
ஞானம் எனும் துணைதனைக் கொண்டு
மாறிடும் உலகின் மாற்றங்களுக்காய்
மாற்றிக்கொள் உனது மனக்குமுறல்களை!

புதியன புகுதலும் பழையன கழிதலும்
புதிது அல்ல! மனிதா-நீயும்
விதியென இருந்திங்கு புலம்பிடாதெழு
மதி கொண்டு படைத்திடு புதிய சரிதம்தனை!

முந்தையர் காலமதை முன்னோக்கிப் பார்த்து-உனது
தந்தை தாய் வாழ்வுதனை உற்றுமே நோக்கி
சந்ததி போற்றிட சரியான பாதையில்
சிந்தித்து நடைபோடு மனதினை மாற்றி

தும்பிக்கைதானே யானைக்குப் பலம்
நம்பிக்கைதானே மானிடர்க்குப் பலம்-நீ
சந்திக்கும் இடர்களை தள்ளி நீ வைத்து
சிந்தித்து முன்னேறு சரித்திரம் படைப்பாய்!

மனிதா மனிதா மனத்தினை மாற்று
இனிதாய் வாழ்வாய் மனத்திடம் கொண்டு
புதிதாய் உலகினில் தோன்றிடும் துயர்கள்
பனியாய் விலகிடப் பாதையை அமைப்பாய்

மாறிடும் உலகில் மானுடம் உயர
தேடியே பலவழிமுறைகளைக் காணப்பாய்-துயர்
பாடிடும் உனது செயல்களை மாற்று
ஓடிடும் துன்பங்கள் நாடிவரும் இன்பஊற்று.

**இ.சிறிதரன்,**
கிளிநொச்சி.

# காலம் ஒரு கைவிளக்கு

சமூகத்தின் ஆரோக்கியமான இருத்தலுக்கு சமூக மயமாக்கல் பொறிமுறையின் இயங்கு நிலை அவசிய மாக வேண்டப்படுகின்றது. ஒரு தனிமனித உயிரி சமூ கத்தை புரிந்து கொண்டு சிறப்பாகத் தன்னைக் கட்டியெழுப்புவதும் கட்டியெழுப்பாமல் விடுவதும் சமூக மயமாக்கல் பொறி முறையின் இயங்கு நிலையிலேயே தங்கியுள்ளது. வலு விழப்புடன் கூடிய நபர்கள் மட்டிலும் இதுவே பொதுவான நியதியாக இருக்கின்றது. ஏனைய மனிதர்களோடு ஒப் பிடுகின்ற போது வலுவிழந்தவர்கள் சமூக நீரோட்டத்தில் கலத்தல் என்பது இன்றும் சவால்நிறைந்ததொன்றாகவே காணப்படுகின்றது.

குடும்பமட்டத்தில் வலுவிழந்தவர்களுக்கு வழங் கப்படுகின்ற ஒத்துணர்வுடனான ஆதரவே அவர்கள் சமூகத்தின் ஏனைய கட்டமைப்புக்களில் வெற்றிகரமாக துலங்குவதற்கு வழிவகுக்கின்றது. இல்லாதபோது அவர் களது வாழ்க்கை விருத்தி பாதிக்கப்படுவதோடு சமூக மேம்பாடும் கேள்விக்கு உள்ளாகின்றது.

உரியகாலத்தில் பெற்றோர்களோ பாதுகாவலர் களோ ஒரு வலுவிழந்தவரை சமூகபரிமாணத்திற்கு ஒத்திசைவானவர்களாக தயார்படுத்துவதை விட்டுவிட்டு பின்னர் மனம் வருந்துவதை நாம் காண்கிறோம். இந்த நிலை சுடலை ஞானத்திற்கு ஒப்பானது.

வலுவிழந்த ஒரு நபர் தொடர்ச்சியாக வீட்டில் முடக்கி வைக்கப்படுகின்ற போது குறித்த நபர் உடல் உள சமூக மற்றும் மனவெழுச்சிகள் விடயங்களை கையாள் வதில் பிரச்சனைகளை எதிர்கொள்கின்றார். இந்தநிலை ஒரு தனிநபர் என்கின்ற நிலையைத் தாண்டி, குடும்ப மற் றும் சமூக மட்டங்களில் பாரிய தாக்கங்களை ஏற்படுத்த வாய்ப்புண்டு. எனவே இந்தத் தீவிரநிலையை கருத்தில் கொண்டு சமூக நிறுவனங்களின் துணையோடு உரிய காலப்பகுதியில் வலுவிழந்தவர்கள் சமூகமயமாக்கப் படுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும். இதற் கான முதல் திறவுகோல் குடும்பமட்டத்திலேயே இருக் கிறது என்பதை புரிந்துகொள்வது எங்கள் சமூகத்திற்கு பெரிதும் நன்மை தரும்.

**திரு. க. தர்மசேகரம்**
பிரதம ஆசிரியர்



# நாளைய விடியலின் வழியாவோம்

நாடு எமது உயிர்மூச்சு-எனப்
பேசுவதெல்லாம் வெறும் பேச்சு
எல்லாத் தேசமும் நம் தேசம்-என
நேசம் கொண்டு வாழ்ந்திடுவோம்

வெள்ளையன் கறுப்பன் நிற
பேதமெல்லாம்-இனியும்
எமக்குள் வேண்டாமே
உலக மாந்தர் அனைவருமே
ஒரு தாய் பெற்ற பிள்ளைகளே

ரத்தம் ஏதும் சிந்தாமல்-வெடிச
சத்தங்கள் இனியும் கேட்காமல்
யுத்தம் இல்லாத ஓர் பூமி சமைப்போம்-அதில்
நித்தம் சமாதான கீதம் நாமிசைப்போம்

வறுமைகள் நீங்கிட வழிசெய்வோம்-
சகோதரன்
விழி நீர் துடைத்திடக் கை கொடுப்போம்
ஏழைகள் வாழ்வும் உயர்ந்திடவே என்றும்
நித்தம் சமாதான கீதம் நாமிசைப்போம்

உடலின் ஊனம் பொருட்டில்லை
உள்ளத்தில் ஊனம் எமக்கில்லை
அடைவோம் நாமும் எமதிலக்கை- இனி
என்றும் வானமே எமக்கெல்லை

ஒற்றுமை என்னும் கயிற்றினையே
பற்றியே நாமும் பிடித்திடுவோம்
ஒருதாய் பெற்ற பிள்ளைகளாய்
ஒன்று கூடியே உலகில் வாழ்ந்திடுவோம்

வென்றவர் வரலாற்றை படித்திடுவோம்
சாதித்து சாதனைகள் புரிந்திடுவோம்
எதிர்மறை சிந்தனைகளை அகற்றிடுவோம்
விடியலை நோக்கிய பயணங்களால்
ஒளியை காணாது விடமாட்டோம்.

மண்ணில் வாழும் மனிதர்களின்
மனங்களில் மனிதம் மலர்ந்திடவே
மண்ணின் மைந்தர் நாம் தானே
மனிதம் கொண்டே உழைப்போமே

விதையாய் இன்று விழுவோமே
விருட்சமாய் நாளை எழுவோமே
நமக்கு(ள்) நாமே ஒளியாவோம்
நாளைய விடியலின் வழியாவோம்.

**தயாமினி குபேரமூர்த்தி**
இணுவில்.

## வலிகளை உரமாக்கி எழுந்த உலக விருட்சங்கள்



# இல்லையென்றால் விடுவேனா?

## றிச்சர்ட் பேர்ணஸ்டைனின் (Richard H. Bernstein ) வாழ்க்கைக் குறிப்பு

ஏ.ஜே. ஞானேந்திரன்

வாழ்க்கை என்பது 'இல்லைகள்' நிறைந்ததுதான். மனிதன் ஆசைப்படுவது எல்லாமே அவனுக்குக் கிடைத்து விடுவதில்லை. பணமிருந்தாலும், உடல் நலம் நன்றாய் இருப்பதில்லை. நல்ல ஆரோக்கியம் நிறைந்தவராக இருந்தாலும், வாழக்கையை அனுபவிக்க போதிய பணம் இருப்பதில்லை.

இன்னும் சிலருக்கு, பிறப்பிலேயே இல்லை என்று ஆகிவிடுகின்றது. எனக்குத் தெரிந்த அயல்வீட்டுக் குடும்பத்தில், ஒரு 18வயது இளைஞன் இருக்கிறான். வாட்டசாட்டமான அந்த அழகான இளைஞனுக்கு பிறப்பிலிருந்தே பேச வராது. சிறுவயதில் இதை ஒரு குறையெனப் பார்க்காது, பிள்ளையை உற்சாகமாக வளர்த்த பெற்றோருக்கு, மகன் வளர வளர அவனைப் பற்றிய ஏக்கங்கள் நீள்கின்றன! இருந்தும் அவர்கள் அவனை வாழ்க்கையில் முழுமைபெறச் செய்வதற்கான வழி வகைகளைத் தேடினர். ஈற்றில் வெற்றியும் கண்டனர்.

அப்படிப்பட்ட ஒருவரையே இம்முறை வலு மூலம் வெளிக்கொணருகிறோம். அவர் பெயர் றிச்சார்ட் பேர்ணஸ்டைன். அவர் ஒரு அமெரிக்கர். அவர் தொழிலால் ஒரு வக்கீல். பிரதம நீதியரசர். இத்தனைக்கும் பிறப்பிலிருந்து துரதிஸ்டவசமாக இவர் கண்கள் பார்க்கும் சக்தியை இழந்து விட்டன. Retinitis pigmentosa என்ற நோயின் தாக்குதல் தான் அவர் பார்வை இழந்ததற்குரிய காரணம் என்கிறார்கள் 1974ஆம் ஆண்டு பிறந்த இவர், ஒரு வக்கீலாகப் படித்து, பின்பு அமெரிக்க மாவட்டமான மிச்சிகானின் சுப்ரீம் நீதிமன்ற நீதவானாகியவர். மிச்சிகான் பல்கலைக் கழகப் பேராசிரியராகவும் இருந்திருக்கிறார்.

இத்தகைய வெற்றியை இவரால் எப்படி எட்டமுடிந்தது?

பார்வை தரப் பின்வாங்கி விட்டாரே இறைவன் என்று நினைத்து இவர் பெற்றோர்கள் உலகத்துக்கு முறையிட்டுக் கொண்டிருந்தார்களா? இல்லைச் சிறுவன்தான் மனமுடைந்து எல்லாம் இழந்தவன்போல் ஒதுங்கியிருந்தானா?

இல்லவே, இல்லை! இழப்பில் ஏற்றம் காண விழைந்தவர்கள் இந்த

உயர்ந்த மனிதர்கள். "உலகம் எனக்கு இருண்டுவிடவில்லை" என்று வெளி உலகுக்குத் தன்னை வெளிச்சம்போட்டு காண்பிக்கத் தொடங்கினான் அந்த இளைஞன்..

இந்த இடத்திலே இன்னொன் றைச் சொல்லியாக வேண்டும். இன்று இவருக்கு 41 வயது. இவர்தான், மிச்சிக் கான் பிராந்தியத்தின் முதன் முதல் பார்வை இழந்த சுப்ரீம் நீதிபதி என்பது இவருக்குப் பெருமை சேர்க்கும் விடயம். கண் ஒளியை இழந்தது அவர் தப் பில்லை. அது பரம்பரையில் வந்தது என்கிறார்கள். இவர் இழந்துவிட்டது கண்ணின் ஒளியைத்தானே அன்றி நம்பிக்கை ஒளியை இவர் இழக்க வில்லை. கீழே குனிந்து பார்க்காமலே மேலே ஏறத்தொடங்கினார். இடையில் இன்னலென்று இறங்கி வரவும் நினைக் கவில்லை. ஏறினார்,ஏறினார் உச்சிவரை சளைக்காது ஏறி இன்று உச்சியைத் தொட்டும் விட்டார். இதுவல்லவோ சாதனை!

"இல்லையென்றால் விடுவேனா?" என்று தன்னைத்தானே சவாலாகக் கேட்கும் துணிச்சல் அவரிடமிருந்தது. வாழ்க்கையில் வெற்றியையும் கண்ட மனிதராக இன்று போற்றப்படுகிறார்.

இவற்றைவிட மரதன் ஓட்டப் போட்டிகளிலும் இவர் கலந்து கொண்டி ருக்கிறார் என்பது நம்மை வியப்பின் எல்லைக்கு கொண்டு செல்லும் தகவலாக இருக்கின்றது. அதுவும் ஒன்றல்ல இரண் டல்ல 18 தடவைகள் நடைபெற்ற மரதன் ஓட்டப் போட்டிகளில் கலந்து கொண் டுள்ளார். இதுவும் ஒரு சாதனையே!

"வழக்குகளில் பலவற்றைப் பேச வேண்டியிருக்கும். எனவே பலரைப் பற் றிய பல தகவல்களை ஞாபகத்தில் வைத் திருந்தாக வேண்டும். இதற்காகத் தின மும் 15 மணி நேரம் உழைக்கும் பழக்




கம் எனக்கு இருக்கின்றது. என் நண் பர்கள், குறிப்பேட்டில் குறித்து வைத்ததைப் பார்த்து, நீதிமன்றத்தில் வாதாடுவார்கள். என்னால் அப்படிச் செய்ய முடியாதே!" என்று சொல்லி நம்மை அதிசயிக்க வைக் கிறார் இந்த மனிதர்.

தகவல்களை திரட்டி அவற்றை மனப்பாடஞ் செய்வதற்கு பல மணி நேரங் களை தினமும் ஒதுக்குவது என்பது பேர்ண்ஸ்டைனுக்கு அப்படியொன்றும் புதிதல்ல. சட்டக்கல்லூரியில் படித்துக் கொண் டிருந்த காலத்தில், (அப்பொழுது இப்படியா னவர்களுக்கு சட்டக் கல்வி கற்பிக்க அமெரிக்காவில் 4 சட்டக் கல் லூரிகள் மாத்திரமே இருந்துள்ளன.) பலரை ஒழுங்கு செய்து , தான் மனப்பாடம் செய்ய வேண்டியதை பல தடவைகள் வாசிக்க வைத்து செவிமடுப்பது இவர் வழமையாக இருந்துள்ளது. பிரெயிலி முறையில் எழுதப்பட்டிருந்த புத்தகங் களை இவர் நாடவும் இல்லை."ஒரு பக்க விடயம், பிரெயிலி முறையில் 70 பக் கங்களில் இருக்கும். எனவே அதை நான் விரும்பவில்லை" என்கிறார் இவர்.

இன்று இந்த நிலை மாறியி ருக்கின்றது. அரச நிதியில் இவருக்கு



உதவியாளராக ஒருவர் பணிக்கமர்த்தப்பட்டு இருக்கிறார். வாரத்திற்கு ஒரு தடவை இடம்பெறும் கருத்தரங்கு ஏற்பாடுகளைக் கவனிப்பதும், வாய்மொழித் தர்க்கத்திற்கான விடயங்களைத் தயார் செய்வதும் அந்த உதவியாளர் பணி.

அதென்ன கருத்தரங்கு?என்பதற்கும் இவர் விளக்கம் தருகிறார்.

“ஒவ்வொரு வாரமும் 26 வழக்குகள் இடம்பெறுகின்றன..., இந்த வழக்குச் சம்பந்தப்பட்ட விடயங்களைக் குறிப்பெடுப்பது என்பது பெரிய பணி. இதன் முழு விபரங்களையும் என் மூளையில் பதித்தாக வேண்டும். வழக்கின் முடிவுகள் மனித வாழ்வை மாற்றக் கூடியவை. எனவே நான் மிகக் கவனமாகச் செயற்பட வேண்டும்” என்கிறார் இவர்.

“உங்களிடம் பலதையும் மனதில் பதிக்கும் அபார சக்தி இருப்பதாகச் சொல்லுகிறார்களே?” என்று கேட்கப்பட்ட போது, “என் நண்பர்களைப் போல் எனக்கு எளிதில் இயற்கையாக எதுவுமே மூளைக்கு வந்துவிடுவதில்லை” என்று அடக்கமாகக் கூறும் இவர் “கடினமான உழைப்பையே நான் நம்பியிருக்கிறேன்” என்று கூறியிருக்கிறார்.

சட்டக் கல்லூரியிலிருந்து இவர் பட்டதாரியாக வெளியேறிய காலம் 1999. தனது பிறந்த நகரமான மிச்சிகன் பிராந்தியத்திற்கு திரும்பியதும், அங்கு அவரது தந்தையின் தலைமையில் நடாத்தப்பட்டு வந்த சட்டநிறுவனத்தில் இணைந்து கொண்டார். இவரது உடன் பிறப்புகளான பெத், மார்க் ஆகிய இருவரும் இங்கே தான் பணியாற்றினார்கள்.

ஏனையோர் கையாள விரும்பாத, செலவு மிகுந்த, சவாலான வழக்குகளை பொறுப்பெடுத்துக் கொண்டார் பேர்ணஸ்டைன். பல பிரசித்தமான வழக்குளில் இவர் பெயர் அடிபடுகின்றது.பஸ் வண்டிகளில் சக்கர நாற்காலி பொருத்துவது சம்பந்தமான வழக்கு மிகவும் பிரசித்தமானது. அமெரிக்க நீதி அமைச்சு டெட்ரொயிட் நகரசபைக்கு எதிராக தொடுத்த வழக்கொன்றை ஒரு உதாரணமாக எடுத்துக் கொள்ளலாம்.

“மாற்றுத் திறனாளிகள் கவனிக்கப்படல் வேண்டும். இவர்கள் சமுதாயத்தில் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும்.” என்ற விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகிறார் இவர். அவர்கள் எதிர்நோக்கும் பெரிய சவால் என்னவென்றால் அவர்கள் “தங்களுக்கென ஒரு வேலையைத் தேடிக் கொள்வதுதான்” என்கிறார். ஒரு வேலை கிடைத்து விட்டால் இந்த மாற்றுத் திறனாளிகள் வாழ்க்கை எந்த அளவுக்கு

மாறும் என்பதை அவர் நன்றாகவே அறிந்து கொண்டவர்.

தன் சுய அனுபவத்தைப் பற்றியும் இவ்வாறு இவர் பகிர்ந்து கொள்கிறார்.

"நான் சட்டக் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்த சமயம், 65 சட்ட நிறுவனங்களில் நேர்முகப் பரீட்சைக்காகச் சென்றிருந்தேன். ஆனால் இதில் எவருமே என்னைத் திருப்பி அழைக்கவில்லை" என்கிறார் இவர். இப்படியான சூழ்நிலை எப்பொழுதும் எவருக்குமே



மனமுடைந்த நிலையைக் கொண்டு வந்து சேர்த்துவிடும். அது மாத்திரமல்ல உற்சாகத்தையும் இழக்கச் செய்து விடும். ஆனால் பேர்ன்ஸ்டைன் மனம் தளர்ந்து விடவில்லை.

"நான் 15 மணி நேரம் தினமும் வேலை செய்வது. ஹோட்டல்களில் தூங்குவது, அடிக்கடி பயணிப்பது என்பது ஏனையோரின் வாழ்வை மேம்படுத்த வேண்டும் என்பதற்காகவே" என்கிறார் இந்தத் தன்னம்பிக்கையாளர்.

"அமெரிக்காவில் பார்வை இழந்தவர்களில் 85 வீதமானவர்களுக்கு வேலை வாய்ப்பு இல்லை. எனக்கு அளிக்கப்பட்டது போல், இவர்களுக்கு வாய்ப்புகள் அளிக்கப்படாததே இதற்கான காரணம். " என்கிறார் இந்தக் கடும் உழைப்பாளி.

அமெரிக்கா முழுவதும் பயணமாகியுள்ள இவர் ஈகுவடோர், அவுஸ்திரேலியா, பிரேசில், இஸ்ரவேல் ஆகிய நாடுகளுக்கும் பயணஞ் செய்திருக்கின்றார். "உங்கள் பலத்தின் மூலஸ்தானம்" என்ற தலைப்பில் பல நாடுகளில் இவர் உரையாற்றி இருக்கின்றார். இவர் அடிக்கடி செல்லும் நாடு இஸ்ரவேல். இந்த நாட்டை மிகவும் நேசிக்கும் இவர், "அங்கு தன்னிச்சையாக விரும்பிய இடங்களுக்கு, பஸ் வண்டிகளில் என்னால் பயணிக்க முடியும்" என்று உற்சாகமாகச் சொல்கிறார்.

மாற்றுத் திறனாளிகளுக்கு இவர் ஒரு "உற்சாக டானிக்" என்று சொல்வது மிகையான கூற்றல்ல! "இல்லையென்றால் விடுவேனா?" என்ற அசத்தலான, துணிச்சலான இவர் உழைப்பு நம்மை மிரள வைக்கின்றது. இவர் தந்த டானிக் கால் வலு வாசகர்கள் எத்தனைபேர் உற்சாகப்படப் போகிறீர்கள் பார்க்கலாம்.

# வலைவெளி

(கடந்த இதழ் தொடர்ச்சி...)


## சென்சரி பிரச்சினைகள்

பாகம்-02

(Sensory Problems)

# ஓட்டிசம்

பாலபாரதி




"இப்படி சமநிலை குலைகையில் நான் மிகவும் வினோதமாக நடந்து கொள்கிறேன். ஒரே நேரத்தில் 40 தொலைக்காட்சி அலைவரிசைகளை ஒரு சேரப் பார்த்தால் எப்படியிருக்குமோ அது போல் குழப்பமாகவும், அசௌகரியமாகவும் உணர்கிறேன்", "சென்சரி ஓவர் லோட்" எனும் நிலையைப் பற்றிய ஒரு ஒட்டிச பாதிப்புடையவரின் வாக்குமூலம் இது.நம்மைப் போல சராசரி வாழ்க்கை வாழும் மனிதர்களுக்கு இந்நிலையைக் கற்பனை செய்து கொள்வது கூட சிரமம் தான்.

கண்டு கேட்டு உண்டு உயிர்த்து உற்று அறியும் ஐம்புலனும் மூளையுடன் கொண்டுள்ள தொடர்பை சென்சரி என்று சொல்லலாம். அவ்வைந்து புலன்களைத் தவிர்த்த சில விஷயங்களும் இருக்கிறது என்றாலும் முதன்மையானவை ஐம் புலன்கள் வழியே நமக்கு கிடைக்கும் உள்ளீடுகள்தான்.

எந்தவொரு பொருளையும் அல்லது விஷயத்தையும் மூளை உணர்வது கண், மூக்கு, வாய், காது, சருமம் ஆகிய புலன்களின் வழியே அவை தரும் அடிப்படைத் தகவல்களை பரிசீலிப்பதன் மூலம் தான். அத்தகவல்களின் அடிப்படையில் தான் நாம் மேற்கொண்டு சிந்தித்து, உணர்ச்சி பூர்வமாகவும் உடல் மூலமாகவும் அத்தகவல/செய்கைக்கு எதிர் வினையாற்றுகிறோம். சாதாரணமாய் இவையெல்லாம் தன்னிச்சையாகவே நடக்கும் என்பதால் நாம் இவற்றை பொருட்படுத்துவதில்லை.

ஆனால் ஓட்டிச பாதிப்பு உடையோருக்கு இந்த சென்சரி தகவல்களைப் பெறுவதிலும், அவற்றை பகுப்பாய்வு செய்து புரிந்து கொள்வதிலும் மிகுந்த சிக்கல்கள் உண்டு. அச்சிக்கலில் மாட்டியவர்கள், மிகுந்த மனப் பதற்றத்தையும், அழுத்தத்தையும் உணர்வார்கள். ஒரு



சில ஓட்டிசக் குழந்தைகள் உடல் ரீதியிலான வலியையும் உணர்வ துண்டு. இது அவர்களின் நடத்தையை உடனடியாக பாதிக்கும்.

ஐம்புலன்களின் மூலம் நம்மை அடையும் தொடுதல், கேட்டல், பார்த்தல், முகர்தல், சுவைத்தல் என்பது தவிர இன்னும் இருவகையான சென்சரிகளும் உண்டு. அவையும் முக்கியமானவை தான்.

**1. அவை சமநிலை**
(balance or 'vestibular')
**2. உடலை உணரும் திறன்**
(body awareness or 'proprioception').
ஓட்டிசக் குழந்தைகள் இந்த ஏழு வகை உணர்வுகளுக்கும் மிகையாகவோ குறைவாகவோ எதிர்வினை புரிகின்றவர்களாக இருக்கின்றனர். (over- or under-sensitive /'hypersensitive'or'hyposensitive').


முந்தைய கட்டுரைகளில் சொன்னது போல ஓட்டிசம் ஸ்பெக்ட்ரமிலிருக்கும் குழந்தைகள் ஒவ்வொருவரின் பாதிப்புகளும் பிரத்தியேகமானவை. எனவே இங்கே குறிப்பிடப்போகும் எல்லா சிக்கல்களும் எல்லாக் குழந்தைகளுக்கும் இருக்க வேண்டுமென்பதில்லை.

சென்சரி பற்றி எழுதவேண்டும் என்று நினைத்து, என் ஆய்வுக்கு உதவிக் கொண்டிருக்கும் மருத்துவர்களிடமும், தெரபிஸ்ட்டுகளிடமும் பேசியபோது, அடுக்கடுக்காய் பல நிலைகள் இருப்பதை உணரமுடிந்தது. அவர்கள் சொன்ன விசயங்களையும், கொடுத்த சுட்டிகளின் வழியும் இக்கட்டுரையை தமிழில் எளிமைப்படுத்தி எழுத முனைந்துள்ளேன்.

1. பார்வை
2. சத்தம்
3. தொடுகை
4. சுவை
5. முகர்தல்
6. சமநிலை
7. உடலை உணரும் திறன்

மேற்கண்ட ஏழும் மிகவும் முக்கியமான விஷயங்கள் என்று சொல்கிறார்கள். ஒவ்வொரு வகை சென்சரியிலும் சாத்தியமான எல்லா சிக்கல்களையும், இருவேறு படி நிலைகளையும் ஓரளவுக்கு விளக்க முயற்சிக்கிறேன்.

இப்பதிவின் நீளம் கருதி அவற்றை தனிக்கட்டுரையாக அடுத்த பதிவில் பார்க்கலாம்.



# செய்திச் சாரல்



## மாற்றுத்திறனாளிகளுக்கு தனித் துறை

### திருநங்கைகளுக்கு வாரியம் தந்த கருணாநிதி

விமர்சனங்கள் பல இருந்தாலும் சமூக சீர்திருத்தங்களுக்கும் அடிக்கோடிட்ட அரசியல்வாதி என்று கருணாநிதியை சொல்வதற்கு காரணமாக அமைந்தது மாற்றுத்திறனாளிகளுக்கு அறிவிக்கப்பட்ட தனித்துறை மற்றும் திருநங்கைகளுக்கான தனி வாரியம்.

மனித சமுதாயத்தில், காது கேளாதவராய், கண் தெரியாத வராய், வாய்பேச முடியாதவர்களாய், கை கால்களைப் பயன்படுத்த இயலாதவர்களாய், மன நோயாளிகளாய் உள்ள அனைவரையுமே "ஊனமுற்றோர்" என்பதற்குப் பதிலாக, "மாற்றுத்திறனாளிகள்" என்று அழைக்கின்ற முறை குறித்து 2007-ம் ஆண்டிலேயே ஐக்கிய நாடுகள் அவையில் விவாதிக்கப்பட்டது.

அந்த விவாதத்தின் அடிப்படையில் தமிழகத்தில் "ஊன முற்றோர்" என்ற சொல் ஒழிக்கப்பட்டது. அன்று முதல் உடல் ஊன முற்றவர்கள் இனி, "மாற்றுத்திறனாளிகள்" என அழைக்கப்படு வார்கள் என்று அறிவிக்கப்பட்டது.

**மாற்றுத்திறனாளிகள் துறை**

இதனைத் தொடர்ந்து 19.3.2010 அன்று தி.மு.க ஆட்சியில், 2010-2011 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் முதல்வரின் நேரடிப் பார்வையில் இயங்கும் "மாற்றுத் திறனாளிகளுக்கான தனித் துறை" அறிவிக்கப்பட்டு அன்றே அரசாணையும் பிறப்பிக்கப்பட்டது. அதன் பின்னர், துறையின் பெயரும், அலுவலகம் மற்றும் அலுவலர்கள் பெயர்களும் மாற்றி அமைக்கப்பட்டன.



**உதவித்தொகை**

மாற்றுத்திறனாளிகளுக்கு உதவித்தொகை, வேலைவாய்ப்பில் இடஒதுக்கீட்டு முறையும் கடைப்பிடிக்கப்பட்டது. மேலும் மாற்றுத்திறனாளியை இன்னொரு மாற்றுத் திறனாளி திருமணம் செய்துகொண்டால் அவர்களுக்கும் திருமண உதவித் தொகை வழங்கும் திட்டத்தையும் கருணாநிதி தலைமையிலான அரசு 2009-2010ஆம் ஆண்டு அறிவித்தது.

**நலவாரியம்**

இதே போன்று 2006-ம் ஆண்டு நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலின் போது, தி.மு.க. சார்பில் வெளியிடப்பட்ட தேர்தல் அறிக்கையில், "அனைத்துச் சமுதாயத்தி னராலும், ஒதுக்கப்பட்ட நிலையில் வைக்கப்பட்டுள்ள அரவாணிகளின் நலன்களைப் பாதுகாக்கத்தக்க வகையில், அவர்களின் பல்வேறு கோரிக்கைகளை முறைப்படி பரிசீலித்து முடிவுகள் மேற்கொள்வோம்" என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

**திருநங்கைகளுக்கு உரிமை**

இதன் அடிப்படையில் தி.மு.க. ஆட்சியில் 15-4-2008 அன்று "தமிழ்நாடு அர வாணிகள் நல வாரியம்" தொடங்கப்பட்டு, அரவாணிகள் கணக்கெடுக்கப்பட்டு, அடை யாள அட்டை, குடும்ப அட்டைகளும், தொகுதி வீடு மற்றும் மருத்துவ காப்பீட்டுத் திட்டங்கள் அறிவிக்கப்பட்டன. மேலும் அரவாணிகள் என்று அழைக்கப்பட்ட வர்களுக்கு "திருநங்கைகள்" என்று அழைக்கும் முறையையும் கருணாநிதி அறிமுகப்படுத்தினார்.

## நம்பிக்கையால் சிகரம் தொட்ட சிகை அலங்காரத் தொழிலாளி

ஆர்ஜென்டீனாவைச் சேர்ந்த கபிரியேல் ஹெரடியா என்பவருக்கு இப்போது வயது 20. இவர் ஒரு முடி திருத்தும் கலைஞராக திகழ்கின்றார். இதில் என்ன அதிசயம் இருக்கின்றது என்று கேட்கின்றீர்களா? ஆம் பிறக்கும் போதே இவருக்கு இரு கைகளும் இல்லை ஆனாலும் இவரது பெற்றோரும் நண்பர்களும் கைகொடுத்ததால் இவர் நம்பிக்கையுடன் வாழ்க்கையில் வெற்றிகளை பெறலானார். இவரது தாயார் சிகை அலங்காரத் தொழிலினைச் செய்து வந்ததனால் தன் மகனையும் அத்தொழிலில் திறமை மிக்கவனாக உருவாக்க வேண்டும் என விரும்பினார். இவரது விருப்பம் வீண்போக வில்லை. கபிரியேல் 14 வயதில், முடி திருத்துவது, தாடியினை சரி செய்வது போன்றவற்றில் பயிற்சிகளைப் பெறலானார். ஆரம்பத்தில் இது இவருக்கு பொழுதுபோக்காக அமைந்த போதிலும் காலப்போக்கில் இலாபத்தை தரத் தொடங்கியது. இதனால் இதனை தன் தொழிலாக்கிக் கொண்டான்.

தனது கையின் சிறு பகுதி மற்றும் கருவிகள் என்பவற்றின் துணையோடு சிகை அலங்காரத் தொழிலினைச் செய்து வாடிக்கையாளரினையும் பார்ப்போரினையும் ஆச்சரியப்பட வைக்கின்றார்.

# மாற்றுத்திறனால் அனைவரையும் வியக்க வைத்த அச்மத் ஜீல்கர்

இந்தோனேஷியாவைச் சேர்ந்த 25 வயதான அச்மத் ஜீல்கர் என்பவர் ஆச்ச ரியப்படும் வகையில் நிழற்படங்களை எடுத்து அனைவரையும் பிரமிப்பில் ஆற்று கின்றார். இவர் படங்களை எடுத்த விதமும் அவரது கற்பனையும், திறனும் "இந்த ஒளிப் படங்களை எடுத்தவர் யார்?" என்று கேட்கத் தோன்றுகின்றது.

ஆம் இவர் தான் அச்மத் ஜீல்கர், பிறக்கும் போதே இரு கால்களும், முழங்கைக் குக் கீழ் கைகளும் இல்லை. ஆனால் தடைகளைத் தகர்த்து தானே தன்னுடைய வேலைகளைச் செய்யப் பழகிக் கொண்டார். இடுப்புக்குக் கீழே உள்ள அரையடி உள்ள கால்கள் மூலம் நடக்கவும் முழங்கைகளைப் பயன்படுத்தி பொருட்களை எடுக்கவும் பழகிக் கொண்டார். சவாலான வாழ்க்கையாக இருந்தாலும் படிப்பில் கவனத்தைச் செலுத்தினார். ஒருநாள் நண்பர்களுடன் அமர்ந்திருந்தபோது, கமரா குறித்துப் பேச்சு வந்தது. கமரா அவரை இருகரம் நீட்டி அழைத்தது. அவரது கிராமத்துக்கு அடையாள அட்டைக்காகப் படம் எடுத்த போதுதான் முதல் முறை கமராவைத் தொட்டார். அந்த நொடி யிலிருந்து கமரா மீதான ஆர்வம் அதிகரித்தது. கடன் பெற்று ஒரு கமரா வாங்கினார்.

முதலில் கமராவைப் பயன்படுத்தப் பயிற்சி எடுத்தார். அதனை முழங்கைகளால் எடுத்து, ஒரு கை மீது கமராவை வைத்து, வாயால் பட்டன்களை அழுத்திப் படங்களைப் பிடித்தார். பிறகு மற்றவர்களை விடத் தன்னுடைய படங்களை எப்படி வித்தியாசப்படுத்திக் காட்ட முடியும் என்று யோசித்தார். கற்பனைகளை விரிவாக்கினார். ஒவ்வொன்றையும் செயற்படுத்திப் பார்த்தார். இன்றைய காலகட்டத்தில் தொழில்நுட்பம், ஒளிப்படத்தை மெரு கூட்டுவதில் முக்கிய பங்கு வகிப்பதால் எடிட்டிங் நீரச் வேலைகளையும் கற்றுக் கொண் டார். தனக்கான ஒரு வாகனத்தை நண்பர்களின் உதவியோடு உருவாக்கிக் கொண் டார். பிறரின் உதவியின்றி இந்த வாகனத்தை செலுத்தியவாறு எங்கும் சென்று வருவார்.

"கமரா தான் என்னை துயரத்தில் இருந்து மீட்டது. தன்னம்பிக்கை கொண்ட மனிதனாக மாற்றியது. கற்பனை வளத்தைப் பெருக்கியது. மகிழ்ச்சியைக் கொண்டு வந்து சேர்த்தது. முதல்முறை என்னைப் பார்ப்பவர்களுக்கு என் திறமை மீது நம்பிக்கை வராது. அதனால் என்னை ஒருபோதும் முன்னிலைப்படுத்த விரும்பியதில்லை. என்னுடைய படைப்பு பேசப்படும் வரை கொஞ்சம் போராட்டம் இருந்தது. அதற்குப் பிறகு வாய்ப்புகள் வர ஆரம்பித்தன. இப்போது ஒவ்வொருவரும் என் உருவத்தைக் கண்டு என் திறமையைக் குறைவாக மதிப்பிடுவதில்லை. நான் மாற்றுத்திறனாளிதான். ஆனால் குறைபாடு கொண்டவன் அல்ல என்பதை அவர்களே எனக்குப் புரிய வைத்திருக்கின்றார்கள். என்னை முன்னேற்றிக்கொள்வதற்கோ, என் கற்பனை களுக்கோ நான் வரையறை வைத்துக்கொள்வதில்லை" என்கிறார் அச்மத். இன்று புகழ்பெற்ற ஒளிப்படக் கலைஞராகவும் ஒளிப்படக் கலையைச் சொல்லிக் கொடுக்கும் ஆசிரியராகவும் இருக்கிறார். பல்வேறு விருதுகளையும் அங்கீகாரத்தையும் பெற்று வருகிறார்.



தொகுப்பு : நா. கீதா கிருஷ்ணன்

# தசரசம்

இலக்கியம் | இலங்கை | உலகம் | விண்வெளி | விளையாட்டு | மருத்துவம் | தாவரம் | விலங்கு | பிரபலம் | அதிசயம்

## 01. இலக்கியம்

### சீதையின் நடை

பொன்னின் ஒளி, பூவின் வெறி, சாந்து பொதி சீதம்,
மின்னின் எழில், அன்னவள்தன் மேனி ஒளி மான,
அன்னமும், அரம்பையரும், ஆர் அமிழ்தும், நாண,
மன் அவை இருந்த மணி மண்டபம் அடைந்தாள்.

சீதையின் நடை அழகு பற்றி கம்பர் குறிப்பிடும் பொழுது அவளது நடையானது பொன்னினுடைய ஒளியையும், பூவினுடைய மணத்தையும், சந்தனத்தினுடைய குளிர்ச்சியினையும், மின்னலுடைய அழகையும் வென்றதாக கூறுகின்றார். அத்தோடு நடைக்குப் பெயர் பெற்ற அன்னப்பறவை சீதையின் நடை கண்டு தோற்றுப்போய் நிற்பதாகவும், அழகுக்குப் பெயர் பெற்ற தெய்வ உலகப் பெண்கள் சீதையின் அழகைக் கண்டு தம் அழகு தோற்று விட்டதாகவும். இனிய அரிய அமிர்தம் தன் இனிமையில் தோற்று விட்டதாகவும் எண்ணும் அளவிற்கு சீதையின் நடை அழகு அமைகின்றது. அவ்வாறான அழகு பொருந்திய சீதையானவள் நடந்து சென்று அரச சபை மணிமண்டபத்தை அடைந்தாள்.

### சூர்ப்பனகையின் நடை

பஞ்சி ஒளிர், விஞ்சு குளிர் பல்லவம் அனுங்க,
செஞ் செவிய கஞ்சம் நிகர், சீறடியள் ஆகி,
அம் சொல் இள மஞ்ஞை என, அன்னம் என, மின்னும்
வஞ்சி என, நஞ்சம் என, வஞ்ச மகள் வந்தாள்.

சூர்ப்பனகையின் நடை பற்றி கம்பர் கூறும் போது. பஞ்சு போன்று மென்மை யானது. எந்த அளவுக்கு மென்மையானது தெரியுமா? கொடியின் தளிர் அவள் பாதத்தைப் பார்த்தால் வருத்தப்படுமாம். ஏன்? அடடா, இவள் பாதம் இவ்வளவு



மென்மையாகவும் பளிச்சென்று ஒளிவீசுவதாகவும் இருக்கிறதே. நாம் அப்படி மென்மையாகவும் பளிச்சென்றும் இல்லையே என்று தளிர்கள் வருந்துமாம். அவ்வளவு மென்மையான பளிச் சென்ற பாதங்கள் சூர்ப் பனகையின் பாதங்கள்.

அவ்வளவுதானா? இன்னும் சொல்கிறார் கம்பர்.

செக்கச் சிவந்த தாமரை மலர் போன்று இருக்கிறதாம் அவள் பாதம். அப்படிப்பட்ட பாதங்களால் அடியெடுத்து வைத்து நடந்து வருகிறாள். எப்படி நடக்கிறாள்? டங்.. டங் என்று பூமி அதிர்வது போல நடக்கவில்லை. சீராக அடி வைத்து. மெல்ல மெல்ல மயில் போல. அன்னம் போல நடக்கிறாள். அப்படி அவள் நடக்கும் போது. மின்னுகின்ற வஞ்சிக் கொடி போல அழகாகக் காட்சியளிக்கின்றாள்.

இப்படியெல்லாம் அழகாக நடந்து வரும் அவள் எப்படிப்பட்டவள் தெரியுமா? "முழுக்க முழுக்க நஞ்சு (விஷம்) ஆனவள். மனம் முழுக்க வஞ்சனையுடையவள். நஞ்சாகவும் வஞ்சனையின் வடிவமாகவும் வந்தாள். அவள்." என்று கம்பர் சொல்கிறார். இப்பாடல்கள் ஊடாக வஞ்சி மகளாகிய சீதையின் நடை இயல்பாகவே அழகுடையது. ஆனால் வஞ்ச மகளாகிய சூர்ப்பனகை தன் இயல்பு நடையை மாற்றி அழகாக நடக்க முற்படுகின்றாள். இவள் இராமனை மயக்கி அவரை அடைவதற்காக குலுங்கி நடக்கிறாள்.

இக்குலுக்கத்தினை கம்பர் தன் கவிதையிலும் குலுக்கியுள்ளார்.
முதல் அடியில் "அனுங்க" என்ற சொல்லையும் கடைசி வரியில் "வஞ்சி மகள்" என்ற சொல்லையும் வாசிக்கும் போது பாடல் சந்தம் குலுங்குகிறது பாருங்கள். ஆனால் சீதையின் நடை பற்றிய பாடலைப் படியுங்கள். சந்தம், அமைதியாக நடந்து செல்கிறது.

இக் கவி நடையினை கம்பர். திருத்தக்கதேவர் சீவகசிந்தாமணியில் சுரமஞ்சரி நடந்து வரும் காட்சியினை வர்ணிக்கப் பயன்படுத்திய சந்தத்தினை இங்கு பயன் படுத்தினாரா?

சீறடிய கிண்கிணி சிலம்பொடு சிலம்ப
வேறுபடு மேகலைகண் மெல்லென மிழற்றச்
சேறுபடு கோதைமிசை வண்டுதிசை பாட
நாறுமலர்க் கொம்பர்நடை கற்பதென வந்தாள்

திருத்தக்கதேவர் சீவகசிந்தாமணியில் சுரமஞ்சரியின் நடை அழகு பற்றி கூறும் போது. "அவள் சிற்றடியில் அணிந்துள்ள கிண்கிணியும் சிலம்பும் ஒலித்திட. இடையிலே அணிந்திருக்கும் மேகலை மெலிதாய் ஒலி எழுப்ப. அவள் சூடியிருந்த மலரில் தேனும் மகரந்தமும் கலந்ததால் தேன் உண்ண முடியாமல் வண்டுகள் ரீங்காரமிட்டபடி. அங்குமிங்கும் பறக்க. பூங்கொத்துகளைக் கொண்ட ஒரு மலர்க்கொடி நடை பயில்வதைப் போல அவள் நடந்து வந்தாள்." என்கின்றார்.

## 02. இலங்கை

## வடமாகாணம் முக்கிய தொலைபேசி இலக்கங்கள்

| இல | | யாழ்ப்பாணம் | கிளிநொச்சி | முல்லைத்தீவு | மன்னார் | வவுனியா |
|---|---|---|---|---|---|---|
| 01. | பொது மருத்துவ மனை | 021 222 3348<br>021 222 2261 | 021 228 5329 | 021 206 1412 | 023 222 2261 | 024 222 2761 |
| 02. | பொலிஸ் சேவை | 021 222 2222 | 021 228 5457 | 021 229 0120 | 023 222 2222<br>023 222 2227 | 024 222 2222<br>024 222 2226 |
| 03. | புகையிரத சேவை | 021 222 2271 | 025 324 4653 | மாங்குளம்<br>025 324 4652 | 023 323 2233 | 024 222 2271 |
| 04. | அரச பேருந்து சேவை | 021 222 2281 | Dipot<br>021 228 3637 | Dipot<br>021 229 0139 | 023 222 2281 | 024 222 2281 |
| 05. | மின்சார சபை | 021 222 2496 | 021 228 3787 | 021 229 0020 | 023 222 2150 | 024 222 2285 |
| 06. | மாவட்ட செயலகம் | 021 222 2233<br>021 222 2234 | 021 228 3945 | 021 229 0032 | 023 222 2234 | 024 222 2234 |
| 07. | அனர்த்த முகாமைத்துவ அலகு | 021 222 1676 | | வடமாகாண மின்சார சபை | | 021 202 4444 |
| 08. | வட மாகாண தீயணைப்புச் சேவை | 021 222 8888<br>021 320 7777 | | வட மாகாண அவசர அம்புலன்ஸ் சேவை | | 1990 |

## 03.நெதர்லாந்து

- தலைநகரம்: ஆம்ஸ்டர்டாம்
- ஆட்சி மொழிகள்: பிரீசியம்(பிரீசுலாந்து), பப்பியாமெண்டோ(பொனாய்ர்), ஆங்கிலம் (சின் யூஸ்டேசியஸ்,சபா)
- இனங்கள்: ஒல்லாந்தர், துருக்கியர், இந்தோனேசியர், மொரோக்கர, சுரினாமியர், கரிபியன், ஏனையோர்.
- பரப்பு
- மொத்தம்:41,543 கிமீ$^2$

  16,039 சதுர மைல்
- நீர்:18.41
- மக்கள் தொகை
- 2018 கணக்கெடுப்பு 16,847,007
- அடர்த்தி 1,051.6
- நாணயம்: யூரோ,நெதர்லாந்து, அமெரிக்க டொலர்
- அழைப்புக்குறி +31,=599



நெதர்லாந்து இராச்சியத்தின் ஒரு பகுதியாக அமைந்துள்ள நெதர்லாந்து வடமேற்கு ஐரோப்பாவில் அமைந்துள்ளது. இதன் தீவுகள் சில கரிபியன் பகுதியில் உள்ளன. வடகடல் இதன் மேற்கு, பெல்ஜியம் தெற்கிலும், ஜெர்மனி கிழக்கிலும் இதன் எல்லைகளாக அமைந்துள்ளன. நெதர்லாந்து ஒற்றையாட்சி நாடாளுமன்ற

மக்களாட்சி முறையைக் கொண்ட ஒரு நாடாகும். நெதர்லாந்து முழுவதையும் சில வேளைகளில் ஒல்லாந்து என அழைக்கப்படுவது உண்டு. ஆனால், வடக்கு ஒல்லாந்தும், தெற்கு ஒல்லாந்தும், நெதர்லாந்தின் 12 மாகாணங்களில் இரண்டு மட்டுமே.

புவியியல் அடிப்படையில் இது ஒரு தாழ்நிலப் பகுதி.கடல் மட்டத்திற்கு கீழ் அமைந்துள்ள 25% நிலப் பகுதியில் 21% மக்கள் வாழ்கின்றனர். அத்துடன் இதன் 50% நிலப்பகுதி கடல் மட்டத்திலிருந்து ஒருமீட்டருக்கு உட்பட்ட உயரத்தில் அமைந்துள்ளது.

இது ஒரு மக்கள் நெருக்கம் மிகுந்த நாடு இங்குள்ள காற்றாலைகள் புகழ்பெற்றது.


ஆம்ஸ்டர்டாம், நாட்டுத் தலைநகரமாகவும், டென் ஹாக் நாட்டு அரசின் இருப்பிடமாகவும் இருக்கின்றன. நெதர்லாந்து மாகாணங்கள் 12 பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

**விளையாட்டு:**

நெதர்லாந்தில் ஆடப்படும் அனைத்து விளையாட்டுகளிலும் புகழ் பெற்று விளங்குவது கால்பந்து ஆகும். ஹொக்கி மற்றும் கைப்பந்து அடுத்த இடத்தைப் பெறுகின்றன. நெதர்லாந்தின் தேசிய கால்பந்து அணியின் மைதானம் ஆம்ஸார்டாம் அரினாவில் உள்ளது. நெதர்லாந்து கால்பந்து அணி உலகக் கோப்பை போட்டிகளில் 1974, 1978,2010 ஆம் ஆண்டுகளில் இறுதி வரை முன்னேறி இரண்டாம் இடத்தைப் பெற்றுள்ளது. ஐரோப்பிய கால்பந்தாட்டப் போட்டிகளில் ஒரு முறை (1988) வென்றுள்ளது.

நெதர்லாந்து, ஒல்லாந்து (Holland) என்ற துணைப் பெயராலும் அழைக்கப்படுகிறது. நேட்டோ உறுப்பு நாடுகளில் ஒன்றாகும். மிகப் பெரும்பான்மையான டச்சு மக்கள் ஒல்லாந்து, சீலாந்து ஆகிய இரு மாகாணங்களிலேயே வாழ்கின்றனர்.

## 04. வரிக்குதிரைகள்



**உயிரியல் வகைப்பாடு**

திணை : விலங்கினம்
தொகுதி : முதுகுநாணி
வகுப்பு : பாலூட்டி
வரிசை : ஒற்றைப்படைக் குளம்பி
குடும்பம் : குதிரைக் குடும்பம்
பேரினம் : குதிரைப் பேரினம்
துணைப்பேரினம்: uippotigris and Dolichohippus

இனம்

Equus zebra
Equus quagga
Equus grevyi

வரிக்குதிரை பாலூட்டி இனத்தை சேர்ந்த ஒரு விலங்கு ஆகும். இது ஒரு தாவர உண்ணி. இது குதிரை இனத்தைச் சேர்ந்தது. வரிக்குதிரை, பாலூட்டிகளில் குதிரை, கழுதை போல ஒற்றைப்படைக் குளம்பிகள்வரிசையைச் சேர்ந்த ஒரு விலங்கினம். இவை உடல் முழுவதும் கருப்பு வெள்ளையிலான வரிகளைக் கொண்டுள்ளன. இதனாலாயே இவை தமிழில் வரிக்குதிரைகள் எனப்படுகின்றன.

வரிக்குதிரைகள் மந்தைகளாக (கூட்டமாக) வாழ்கின்றன. பொதுவாக ஒரு கூட்டத்தில் ஓர் ஆணும் ஆறு பெண்குதிரைகளும் குட்டிகளும் காணப்படும். பிரம்மசாரிகளான ஆண்கள் தனித்து வாழும்.

நன்கு வளர்ந்த வரிக்குதிரைகள் 1 - 2 மீட்டர் உயரமும் 2 - 3 மீட்டர் நீளமும் கொண்டவை. 250 இல் இருந்து 500 கிலோ எடை வரை இருக்கும். இவற்றால் மணிக்கு 55 கிலோமீட்டர் வேகத்தில் ஓட முடியும். சாதாரணமாக ஒரு நாளில் இவை 80 கிலோமீட்டர் தொலைவு வரை நடக்க வல்லவை.

**வரிகள்**

வரிக்குதிரைகளின் வரிகள் தனித்தன்மை பெற்றவை. இவை கறுத்த உடலில் வெள்ளைவரிகளாய் அமைந்துள்ளன. ஒவ்வொரு வரிக்குதிரையின் வரியும் இன் னொன்றினதைப்போல இருப்பதில்லை. இவ் வரிக்குதிரைகளின் வரிகள் இவற்றிற்கு அழகை மட்டுமன்றி தற்பாதுகாப்பினையும் அழிக்கின்றன. தம்மைத் தாக்கவரும் மிரு கங்களிடமிருந்து தப்பிக் கொள்வதற்குப் புற்களிடையே நின்று கொண்டு வெளிப்புறத்தை மறைக்கும் போது தாக்கும் மிருகத்தின் கண்பார்வையிலிருந்து இவற்றால் தப்ப முடி கிறது. அது மாத்திரமல்ல இந்த மிருகங்கள் தூரத்தில் நிற்கும் போது வரிகள் ஒன்றுடன் ஒன்று இணைந்து இதன் உடலைச் சாம்பல் நிறம் கொண்டது போல தோற்றமளிக்கச் செய்கின்றன. இது காரணமாகச் சிங்கம் , கழுதை, புலி போன்ற மிருகங்களால் தொலை தூரத்தில் நிற்கும் போதும் இரவு நேரங்களிலும் இவற்றைத் தெளிவாகப் பார்க்க முடிவதில்லை. ஆனாலும் இவ் விலங்குகளின் மோப்ப சக்தியிலிருந்து வரிக்குதிரைகள் தப்பித்துக்கொள்ள போராடித்தான் ஆக வேண்டும்.

பொதுவாக சிங்கங்கள் தனித்து வேட்டையாடும் போது குறித்த ஒரு விலங்கை இலக்கு வைக்கும் அவ்வாறு வரிக்குதிரை ஒன்றை இலக்கு வைக்கும் சமயங்களில் அவை கூட்டமாக சிதறி ஓடும்.அவற்றின் வரிகள் சிங்கத்தின் இலக்கை குழப்பி விடுகின்றன. பெருந்தொகையான வரிகள் இணைந்து தான் பார்த்த இரையைத் தேடிக் கண்டுபிடிக்க முடியாத குழப்பத்தைச் சிங்கத்துக்கு ஏற்படுத்துகின்றன.

**வரிக்குதிரைகளில் பெரியது "கிரெவ்வீஸ்"**

இந்த வரிக்குதிரைகளில் பல இனங்கள் இருக்கின்றன. பரந்தவெளி வரிக் குதிரை என்றொரு இனம் இருக்கின்றது. இவை ஆபிரிக்காவின் தெற்கு கிழக்குப் பிராந் தியங்களிலே காணப்படுகின்றன. மலைப்பிராந்திய வரிக்குதிரைகள் என்பது இன் னொரு இனம்.இதன் அடிவயிறு வெள்ளையாக இருக்கும்.புல்வெளிப் பிராந்திய வரிக் குதிரைகளோடு ஒப்பிடும்போது இதன் கறுப்பு வெள்ளைவரிகள் சற்று நெருக்கமாக இருப்பதைக் காண முடியும்.தென்மேற்கு ஆபிரிக்கப் பகுதிகளில் இவை காணப் படுகின்றன.

**நீண்ட ஒடுக்கமான கழுத்துப் பகுதியைக் கொண்ட இனங்கள்.**

"கிரெவ்வீஸ்வரிக்குதிரைகள்" என்ற பெயரில் அழைக்கப்படுகின்றன. வரிக்குதிரை இனங்களில் பெரியது இது தான். ஆபிரிக்க நாடுகளான எதியோப்பியாவிலும் வடகென்யாவிலும் காணப்படும் இந்த வரிக்குதிரைகள் வேகமாக அழிந்து வரும் இனம் என்பதோடு அருகிவரும் இனமாகவும் இருக்கின்றது என்கிறார்கள் ஆய்வாளர்கள்.

**பார்வையும் செவிப்புலமும்**

இதன் கண்கள் பக்கவாட்டில் இருப்பது இதன் பார்வையை துல்லிய மாக்குகின்றது. இவற்றிற்கு இரவுப் பார்வையும் பிரகாசமாக உள்ளது. இருப்பினும் இதை வேட்டையாடும் மிருகங்களுக்கு இருக்கின்ற அளவுக்கு சிறந்தது எனக் கூறிவிட முடியாது. இவற்றிற்கு கேட்கும் திறன், மோப்பசக்தி என்பனவும் சிறப்பாக உள்ளது. குதிரைகளைப் போல வரிக்குதிரைகளும் நின்று கொண்டே தூங்குபவை அயலவர்கள் சுற்றிலும் நின்றால் நிலத்தில் கிடந்தும் உறங்கும்.

கனைத்தும், உரத்து குரைத்தும் ஒன்றுடன் ஒன்று பேசிக் கொள்கின்றன. தனது மூன்றாவது வயதில் குட்டி ஈன்று அம்மாவாகி விடக்கூடியது வரிக்குதிரை.

## 05. ஆச்சரியம் மிக்க காடுகள்



உலக நிலப்பரப்பில் மூன்றிலொரு பகுதி காடுகளால் சூழப்பட்டுள்ளது. இக் காடுகள் பெருந்தொகையான விலங்குகளின் புகலிடங்களாகவும், மண்ணிற்கும் மனிதனுக்கும் ஏன் சகல உயிரினங்களுக்கும் கூட வாழ்வளிக்கும் அரணாகவும் திகழ்கின்றது. ஆனால் மனிதர்கள் இதன் அருமை பெருமையினை அறிந்து கொள்ளாது நடந்து கொள்வதனாலும், காடுகளை அழிப்பதனாலும் ஆண்டு தோறும் அதன் பரப்புக் குறைவடைந்து கொண்டு வருகின்றது.

காடுகளின் முக்கியத்துவத்தையும் அதன் பெறுமதியினையும் உலக சமூகத்தின் கவனத்திற்கு கொண்டு வரும் பொருட்டு ஐக்கிய நாடுகள் சபை 2012 ஆம் ஆண்டில் மார்ச் 21 ஆம் திகதியைக் காடுகளுக்கான பன்னாட்டுத் தினமாக அறிவித்தது. இதன் வெளிப்பாடாக 2013 மார்ச் 21 இல் காடுகளுக்கான பன்னாட்டு தினம் முதல் முதலில் கொண்டாடப்பட்டது. அன்று முதல் ஆண்டு தோறும் மார்ச் 21 உலக காடுகள் பன்னாட்டு தினமாக கொண்டாடப்பட்டு வருகின்றது. உலகில் ஆச்சரியம் மிக்க பல காடுகள் இருப்பதாக ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர். இவை பற்றிப் பார்ப்போம்.

அவற்றில் ஒன்று போர்னியோ தீவில் அமைந்துள்ள போர்னியோ காடுகள் ஆகும். இது மிகவும் பரந்தளவில் காணப்படுகின்றது. இக்காடுகளில் வாழும் காட்டு

விலங்குகளை பற்றிய ஆய்வுகளை மேற்கொள்வதற்கு விலங்கியல் ஆய்வாளர்கள் விரும்பிச் செல்கின்றனர்.

அடுத்து அமேசன் காடுகள் பற்றிப் பார்ப்போம். இது உலக பிரசித்தி பெற்ற காடாகும். இப்பெருங்காடு தென்அமெரிக்க கண்டத்திலுள்ள 9 நாடுகளில் பரவியுள்ளது. இருப்பினும் பிரேசில் நாட்டிலேயே இதன் பெரும் பகுதி வியாபித்துள்ளது. இதனால் இதனை பிரேசில் அமேசன் காடுகள் எனவும் அழைப்பர். இக்காடும் அழிவின் பிடியில் அகப்பட்டுக் கொண்டுள்ளது. 1987 ஆம் ஆண்டு பிரேசில் விஞ்ஞானிகள் இக்காடுகள் வேகமாக அழிவுற்று வருவதை அவதானித்தனர். 3 மில்லியன் சதுர மைல் பரப்பில் வியாபித்திருந்த இக்காடுகளில் 50 வீதமான பகுதி அழிக்கப்பட்டிருப்பது கண்டறியப் பட்டுள்ளது. இந்த வேகத்தில் இக்காடுகள் அழிந்து போகுமேயாயின் அமேசன் காட்டினு டைய எதிர்காலமும் அங்கு வாழும் விலங்குகளின் எதிர் காலமும் கேள்விக் குறியாகி விடும்.


அடுத்து இந்தியக் காடுகள் பற்றிப் பார்ப்போமானால் இக்காடுகள் இந்த நூற்றாண்டின் புகழ் பெற்ற நூலாசிரியரான ஆய்வாளர் ருடியார்ட் கிப்ளிங் என்பவரை மிகவும் கவர்ந் துள்ளது. இது பற்றி அவர் எழுதிய ஆய்வு நூல் பாடத்திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. இக்காட்டிலுள்ள கன்கா தேசிய பூங்காவில் புலிகள் பாதுகாக்கப்பட்டு வருகின்றது.


அடுத்து சிங்கராஜா வனம் பற்றிப் பார்ப்போம். இது இலங்கையில் அமைந்துள்ளது. இங்குள்ள பல வித விலங்குகளையும் மரம் செடி கொடிகளினையும் பூக்களினையும் காணும் போது அது காண்போரை பரவசப்படுத்துகின்றது. இது இலங்கைக்கு சுற்றுலாப் பயணிகளை வரவழைப்பதுடன் நாட்டிற்குப் பெருமையினையும் சேர்க்கின்றது.

அடுத்து மேற்கு ஆபிரிக்காவின் கரையோரத்திலும், ஆபிரிக்காவின் கிழக்குக் கரையிலுள்ள தன்சானியா நாட்டின் பனி மூடிய சிகரமான கிளிமஞ்சரோ மலையின் அடி வாரத்திலும், ஆபிரிக்காவின் உகண்டா, றுவண்டா பகுதிகளிலும் காணப்படும் ஆபி ரிக்கக் காடுகளைக் குறிப்பிடலாம். இங்கு கொரில்லாக் குரங்குகள் வாழ்வது இக் காடுகளுக்கு சிறப்பைத் தேடிக் கொடுக்கின்றது.

அடுத்து அவுஸ்ரேலியாவில் வடக்கேயுள்ள பபுவா நியூகினியாவின் தீவில் காணப் படும் அடர்ந்த காடுகளைக் குறிப்பிடலாம். இக்காடுகள் இத்தீவின் நிலப்பகுதியில் 75 வீதம் பரந்துள்ளது. இக்காட்டில் அதிகளவில் கங்காருகள் வாழ்வது சிறப்புடையது.

அடுத்து இந்தோனேசியாவின் தென்பகுதியில் அமைந்துள்ள அவுஸ்ரேலியாவுக்குச் சொந்தமான கிறிஸ்மஸ் தீவுகளில் அமைந்துள்ள காடுகளைக் குறிப்பிடலாம். இங்கு பல வகையான விலங்குகளும், 40 மில்லியன் வரையான சிவப்பு நண்டுகளும், தென்னை நண்டுகளும் வாழ்வது சிறப்புடையது.





அடுத்து நியூஸ்லாந்தின் வடதீவில் அமைந்துள்ள வைப்புவா காடுகளைக் குறிப்பிடலாம். இக்காடுகளின் ஊடே சூரிய ஒளி நிலத்தைத் தொடும் காட்சி காண் போரை பரவசப்படுத்துகின்றது.

அடுத்து பெரு முகில் காட்டினைக் குறிப்பிடலாம். காட்டை மூடியிருக்கும் முகில்களுக்கு மேல் எழுந்து பார்க்கையில் அழிந்து போன நகரத்தின் கோட்டைகளையும் அரண்மனைகளையும் காணலாம். வழமையான தாவர வர்க்கத்தையும் அங்கு காணலாம்.

அடுத்து கொஸ்ராறிக்கா- மொன்ரவேடே முகில் காடு பற்றிப் பார்ப்போம்.

இந்த அடர்ந்த காட்டினுள் சூரிய ஒளி புகுந்து செல்வது கடினம். அந்த அளவுக்குப் பல வித மரம், செடி, கொடிகள் அடர்ந்து வளர்ந்துள்ளன. இந்தக் காட்டின் மேல் சூரிய ஒளி முகில்களின் ஊடே வரும் காட்சி மிக அழகானதாக இருக்கும்.

இவ்வாறான அழகிய காடுகளை இயற்கை எமக்கு பரிசளித்துள்ளது. இதனைப் பேணிப் பாதுகாத்து வாழ்ந்தால் இந்த அழகிய பூமியில் நாம் ஆரோக்கியமாக வாழ முடியும்.


## 06. அலெக்சாண்டர் கிரகாம் பெல்

இன்றைய நவீன உலகில் கைபேசிப் பாவனையாளர்களின் எண்ணிக்கை நாளாந்தம் அதிகரித்தவண்ணம் உள்ளது. பலவழிகளிலும் நன்மைபயக்கும் இக்கை பேசியை பாவனையாளர்கள் நல்லமுறையில் பயன்படுத்தும் போது அவர்களின் வாழ்விற்கு அனுகூலமாகும். இத்தகைய கைபேசியின் தோற்றத்திற்கு அடித்தளமிட்டது தொலைபேசி இத்தொலைபேசியை கண்டுபிடித்தவர் தான் அலெக்சாண்டர் கிரகாம் பெல்.

இவர் 1847 ம் ஆண்டு மார்ச் மாதம் 3 ம் திகதி ஸ்காட்லாந்திலுள்ள எடின் பரோவில் பிறந்தார். இவருடைய தந்தை அலெக்சாண்டர் மெல்வில்லி பெல் ஒரு பேராசிரியர். இவர் குரல்உறுப்புப்பயிற்சியிலும் பேச்சுத்திருத்த முறையிலும் செவிப்புல வலுவிழந்தவர்களுக்கு கல்வி கற்பிப்பதிலும் ஒரு வல்லுநராகத் திகழ்ந்தார். கண்பார்வை அசைவுகளினால் பல்வேறு உணர்வுகளை எவ்வாறு காட்டுவது? உதடுகளின் அசைவைக் கொண்டு ஒருவர் பேசுவதைக் காது கேளாதோர் எவ்வாறு புரிந்து கொள்வது என்பதைப் பற்றியெல்லாம் பல நூல்களை எழுதியுள்ளார். தாயார் எலிசா கிரேஸ். கிரகாம் பெல்லின் குடும்ப உறவினர்கள் பலர் செவிப் புலன் அற்றோருடன் உரையாடுவது பற்றிய ஆய்வுகளில் ஈடுபட்டிருந்தனர். கிரகாம் பெல்லின் தாயாரும் மனை வியாரும் கூட செவிப்புல வலுவிழந்தவர்கள் எனக் கூறப்படுகின்றது.




கிராகாம் பெல் பள்ளிப் படிப்பில் அதிக நாட்டம் காட்டவில்லை.பத்து வயதிலேயே பள்ளிக்கல்விக்கு முற்றுப்புள்ளி வைத்து விட்டார்.ஆனாலும் தந்தையாருடன் சேர்ந்து செவிப்புல வலுவிழந்தோர் தொடர்பான ஆய்வுகளிலும் கண்டுபிடிப்புக்களிலும் தன்னை ஈடுபடுத்திக்கொண்டார்.ஒலி அலைகள் தொடர்பான பல ஆய்வுகளை மேற்கொண்டார். பேச்சை மின் ஒலியாக மாற்றும் ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்த போது சந்தித்த காது கேளாத பெண்ணை விரும்பி அவளையே திருமணம் செய்துகொண்டார். இவர்களுக்கு இரு ஆண்குழந்தைகளும் இரு பெண்குழந்தைகளும் பிறந்தனர்.ஆனாலும் சிறுவயதிலேயே இரு ஆண்குழந்தைகளும் மரணித்துவிட்டனர்.



அமெரிக்காவிலுள்ள மாசாசூசெட்ஸ் மாநிலத்திலிருக்கும் போஸ்டன் நகரில் 1871 ஆம் ஆண்டில் பெல் குடியேறினார்.அங்கு தான் 1875 ஆம் ஆண்டில் தொலைபேசியைக் கண்டுபிடிப்பதற்கு வழிவகுத்த கண்டுபிடிப்புக்களை இவர் உருவாக்கினார். இவர் 1876 ஆம்ஆண்டு பெப்ரவரி 7இல் தமது கண்டுபிடிப்பான தொலைபேசிக்கான புத்தாக்க உரிமையினை பெற்றுக்கொள்வதற்காக விண்ணப்பித்தார்.சில வாரங்களுக்குப் பிறகு இந்த உரிமை இவருக்கு வழங்கப்பட்டது.

பெல்லுக்கு புத்தாக்க உரிமை வழங்கப்பட்ட பின்பு மிக விரைவிலேயே அவர் பிலெடெல்பியாவில் நடைபெற்ற நூற்றாண்டு விழாக் கண்காட்சியில் தொலைபேசியைக் காட்சிக்கு வைத்தார்.அவரது கண்டுபிடிப்பில் பொதுமக்கள் பேரார்வம் கொண்டனர். இவரது கண்டுபிடிப்புக்கு ஒரு பரிசும் கிடைத்தது.இந்தக் கண்டுபிடிப்புக்கான உரிமைகளை 100 000 டாலருக்கு வெஸ்ரேர்ன் யூனியன் டெலிகிராப் கம்பனி என்ற நிறுவனத்திற்கு வழங்க பெல் முன்வந்த போதும் அதை வாங்கிக் கொள்ள அந்த நிறுவனம் மறுத்துவிட்டது.அதனால் பெல்லும் அவரது நண்பர்களும் சேர்ந்து 1877 ஆம் ஆண்டு யூலை மாதத்தில் தங்களுடைய சொந்த நிறுவனத்தை நிறுவினார்கள்.இந்த நிறுவனம் தான் இன்றைய அமெரிக்கன் டெல்போன் மற்றும் டெலிகிராப் கம்பெனி யின் மூதாதையாகும்.

இவருடைய தொலைபேசிக்கு உடனடியாக பெருமளவில் வணிக முறையில் வெற்றி கிட்டியது.இவர் நிறுவிய நிறுவனம் இன்று உலகிலேயே மிகப் பெரிய தனியார் வணிக நிறுவனமாகத் திகழ்கிறது. பெல் தொலைபேசியுடன் மட்டும் நின்று விடவில்லை. பொட்டோ போன் [28][29][30], ஆடியோ மீட்டர் [31][32][33][34], மெட்டல் டிடக்டர்[35], இன்டக்ஷன் பேலன்ஸ், வாக்ஸ் ரிகார்டிங் சிலிண்டர், கிராமபோன் போன்ற பல கருவிகளைக் கண்டு பிடித்தார். அமெரிக்காவில் உள்ள பாடக் என்ற ஊரில் 1922 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 2 ஆம் தேதி அலெக்சாண்டர் கிரகாம் பெல் காலமானார்.[48] அவர் மறைந்த தினத்தன்று அமெரிக்காவில் உள்ள தொலைபேசிகள் அனைத்தும் 5 நிமிடங்கள் நிறுத்தப்பட்டு இவருக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது.



## 07. மருத்துவரை அடிக்கடி மாற்றினால் மரணிக்க வாய்ப்புகள் அதிகம்

-ஆய்வு ஒன்றில்தெரிய வந்துள்ளது-

ஒரே மருத்துவரிடம் தொடர்ந்து சென்று சிகிச்சை பெறுகின்ற நோயாளிகளின் இறப்பு விகிதம் மிகவும் குறைவு என்று ஒரு ஆய்வின் முடிவில் தெரியவந்துள்ளது இவ் வாறு செய்வதால் கிடைக்கின்ற நன்மைகள் பொது மற்றும் சிறப்பு மருத்துவர்களுக்கு பொருந்துகின்றன.

இந்த நன்மைகள் வேறுபட்ட கலாசாரம் மற்றும் சுகாதார அமைப்புக்களை சேர்ந்த மக்களுக்கும் கிடைப்பதும் இந்த ஆய்வில் தெரியவந்துள்ளது. மருத்துவ நடைமுறையின் மனித அம்சம் "உயிர் காக்கும்" சாத்தியமே. ஆனால், இது புறக்கணிக்கப்பட்டுள்ளது என்று எக்ஸிட்டர் பல்கலைக்கழக ஆய்வாளர்கள் தெரிவித்திருக்கின்றனர்.

நோயாளிகள் தங்கள் சொந்த மருத்துவரைப் பார்ப்பதே மதிப்புமிக்கது என்பதை இந்த ஆய்வின் மூலம் உணர்ந்துள்ளதாக முன்னோடிப் பொது மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர். அதிக பணிச்சுமை அழுத்தங்களால் அந்த குறிப்பிட்ட மருத்துவரைப் பார்ப்பதற்கு அதிக காலம் காத்திருக்க நேரலாம் என்று பொதுமருத்துவர்களுக்கான ராயல் கல்லூரியைச் சேர்ந்தவர்கள் குறிப்பிட்டனர்.

தீவிர நோய், நீண்டகால மன நல பிரச்சனைகள் மற்றும் சிக்கலான மருத்துவ சிகிச்சை தேவைப்படும் நோயாளிகளுக்கு மருத்துவக் கண்காணிப்பும் பராமரிப்பும் தொடர்ச்சியாக ஒரே மருத்துவர் மூலம் வழங்கப்படுவது சிறந்த பயனளிக்கும் என்பது தெரிந்த விடயமே.

பிஎம்ஜே ஓபன் இதழில் வெளியான இந்த ஆய்வு, இங்கிலாந்து, பிரான்ஸ், அமெரிக்கா, கனடா மற்றும் தென் கொரியா உள்ளிட்ட 9 நாடுகளிலிருந்து 22 ஆய்வு முடிவுகளை பகுப்பாய்வு செய்துள்ளது.

பிற நோயாளிகளோடு ஒப்பிட்டு பார்த்தால், இந்த ஆய்வுக் காலத்தில், சராசரியாக இரண்டாண்டுகள் ஒரே மருத்துவரிடம் சிகிச்சை பெற்று வந்தவர்களின் இறப்பு விகிதம் குறைவாக இருப்பது தெரிய வந்துள்ளது.

மருத்துவப் பராமரிப்பு தொடர்ந்து ஒரே மருத்துவரால் கொடுக்கப்படுவது சிறந்தது என்றும், இதற்கு சுகாதார பராமரிப்பு திட்டத்தில் அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டும் என்றும் விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

**சிறந்த தகவல் தொடர்பு**

நோயாளிகளும், மருத்துவரும் அடிக்கடி சந்தித்து, ஒருவரையொருவர் அதிகமாக அறிந்துகொள்ளும்போதுதான் தொடர்ச்சியான மருத்துவ பராமரிப்பு கிடைக்கிறது என்று எக்ஸ்ட்டர் மருத்துவ கல்லூரியின் பேராசிரியர் பிலிப் இவான்ஸ் கூறியிருக்கிறார்.

"இந்த நடைமுறை சிறந்த தகவல் தொடர்பை உருவாக்குவதற்கும், நோயாளிகளுக்கு திருப்தி அளிப்பதற்கும், மருத்துவ ஆலோசனைகளைப் பின்பற்றுவதற்கு அவர்களை வழிநடத்துவதற்கும், மிக முக்கியமாக மருத்துவமனை சேவைகளை குறைத்துவிடவும் பயன்படுகிறது" என்று அவர் கூறியுள்ளார்.

இந்த ஆய்வில் ஈடுபட்டவரும், எக்ஸ்ட்டரிலுள்ள புனித லியோனார்டில் பொது மருத்துவருமான சர் டெனிஸ் பெரேரா கிரே, எந்த மருத்துவரை சந்திக்கிறோம், அவர்களோடு எவ்வளவு சிறந்த முறையில் நோய் பற்றிய தகவல்களை பறிமாறிக் கொள்கிறோம் என்பது நோயாளிகள் நீண்ட காலமாக அறிந்திருக்கும் விடயம் என்று கூறியுள்ளார்.


"இதுவரை, நோயாளிகள் அவர்களுக்கு விருப்பமான மருத்துவரைப் பார்ப்பதற்கு ஏற்பாடு செய்வது வசதியான அல்லது மரியாதைக்குரிய விடயமாக உள்ளது" என்று அவர் தெரிவித்திருக்கிறார்.

தரமான மருத்துவப் பராமரிப்பு எது என்பதும், இதுவே உண்மையிலேயே வாழ்வா, சாவா, என்ற விடயம் என்பதுவும் இந்த ஆய்வில் தெளிவாகியுள்ளது என்று அவர் கூறியுள்ளார்.

**குழு முயற்சி**

பல அணுகுமுறைகளைக் கையாளும் பல சிகிச்சை முறைகள் சோதித்துப் பார்க்கப்படுவதாக பொது மருத்துவர்களுக்கான ராயல் மருத்துவ கல்லூரியின் துணைத் தலைவர் பேராசிரியர் கமிலா ஹெளத்துரோன் கூறியுள்ளார்.

நோயாளிகளின் பதிவேடுகளைப் பார்க்கும், அவர்களோடு நல்லுறவை ஏற்படுத்திக் கொள்கிற ஒரு பொது மருத்துவர் உள்ளிட்ட, சுகாதார பராமரிப்பு நிபுணர்களின் குழு ஒன்றிடம் நோயாளி ஒப்படைக் கப்படுவது அவற்றில் ஒரு அணுகு முறை.




பொது மருத்துவ சேவைகளை சரியான நேரத்தில் சமச்சீராக தொடர்ச்சியாக வழங்குவது, பெரும் சவாலாக உள்ளது. அதிக பொது மருத்துவர்கள் மற்றும் இந்த தொழிலுக்கு மேலதிக மனித வளங்கள் தேவை என்பதுதான் கடைசியில் இதற்கான தீர்வாக அமையும் என்றும் அவர் கூறியுள்ளார்.

## 08. இத்தாலியின் சாய்ந்த கோபுரம்

உலக அதிசயங்களில் ஒன்றாகிய சாய்ந்த கோபுரம் இத்தாலியில் உள்ள பைசா (Pisa) நகரில் அமைந்துள்ளது. இது 1173ம் ஆண்டு August 9ல் பைசா தேவால யத்தின் மணிக்கோபுரமாகவே கட்ட ஆரம்பிக்கப்பட்டது. கட்டுமானப்பணி ஆரம்பித்து 1178ம் ஆண்டில் மூன்றாம் தளம் கட்டப்பட்டுகொண்டிருந்த போது கோபுரம் சாய்வதை அவதானிக்கமுடிந்தது. களிமண் தரையில் 3 மீற்றர் அடித்தளத்தில் பாரிய கோபுரம் கட்டப்பட்டமையால் அது பாரத்தை தாங்காமல் சரியத்தொடங்கியது ஆனாலும் பல நூறு ஆண்டுகளைத்தாண்டியும் விழாது அது சாய்ந்து கொண்டிருந்தமையே அதிச யமாகும். இதுவே சாய்ந்த கோபுரம் என்ற பெயரையும் இதற்கு பெற்றுக்கொடுத்தது. இக் கோபுரத்தின் சாய்வினைத் தடுப்பதற்காக 800 ஆண்டுகளுக்கு மேல் போராடி கடந்த பத்து ஆண்டுகளுக்கு முன்பு தான் இதில் வெற்றி கண்டனர்.

நிலத்திலிருந்து இதன் உயரம் ஏறத்தாள 55 மீட்டர் ஆகவும் எடை 14453 தொன் ஆகவும் காணப்படுகிறது. இக் கோபுர வடிவமைப்பாளர்கள் 60 மீட்டர் உயரம் வரை கட்டுவதற்கு தீர்மானித்தனர். ஆனாலும் கோபுரம் சாயத்தொடங்கியமையால் ஒரு புறம் 55.86 மீட்டரும் மற்றொரு புறம் 56.67 மீட்டரும் இருக்கும் போதே கட்டு மானப்பணி களை முடிவுறுத்திவிட்டனர். கி.பி 1173ல் ஆரம்பிக்கப்பட்ட கட்டுமானப் பணிகள் கி.பி 1307ம் ஆண்டில் முடிவுறுத்தப்பட்டு கி.பி 1372ம் ஆண்டு கோபுரத்தின் மணிக்கூண்டில் மணி நிறுவப்பட்டது. இதற்கான வடிவமைப்பைத் தந்தவர்கள் Guglielmo மற்றும் Bonanno Pisano என்பவர்களாவர்.



பைசா கோபுரத்தின்சாய்வானது கணினி வடிவமைப்புக்கமைய அதிகபட்சம் 5.44 டிகிரி வரை சாயும் பட்சத்தில் கோபுரத்துக்கு எந்த பாதிப்பும் இல்லை என்று கணக்கிட்டுச் சொன்னது ஆனாலும், 1990-ம் ஆண்டு 5.5 டிகிரி சாய்ந்த பைசா கோபுரத்தைக் கண்ட இத்தாலிய அரசு என்ன செய்வது என்று தெரியாமல் கோபுரத்தை மூடிவிட்டது. வருடத்துக்கு 1 மில்லியனுக்கும் மேற்பட்ட மக்கள் பார்வையிடும் இந்த பைசா கோபுரம் 1990-ம் ஆண்டு முதல் 2001-ம் ஆண்டு வரை மூடித்தான் வைக்கப்பட்டிருந்தது. ஒரு வேளை கீழே விழுந்துவிடலாம் என்ற அச்சத்தாலே இது மூடப்பட்டு இருந்திருக்கலாம். 56.67 மீட்டர் இருக்கும் பைசா கோபுரத்தின் பக்கவாட்டில் மண்ணைப் பறித்து எடுத்ததன் மூலம் சாய்ந்து இருந்த கட்டடத்தின் கோணம் சிறிது குறைக்கப்பட்டது. அதாவது 1990ம் ஆண்டு களில் 5.5 டிகிரி என்ற கோணத்தில் சாய்ந்திருந்த கட்டடம் 2001-ம் ஆண்டிற்கு. இடைப்பட்ட காலத்தில் செய்யப்பட்ட மாற்றங்களின் மூலம், 3.99 டிகிரி எனக் குறைக்கப்பட்டது. மூடி வைக்கப்பட்டிருந்த பைசா கோபுரம் ஒருவழியாக பார்வையாளர் கள் வசதிக்காக 2001-ம் ஆண்டு டிசம்பர் 15-ம் தேதி மீண்டும் திறக்கப்பட்டது.

1987-ம் ஆண்டு பைசா கோபுரத்தின் பெருமையை யுனெஸ்கோ பதிவு செய்தது.

## 09. உலகக்கிண்ண உதைபந்தாட்டப் போட்டிகள்-2018

முதலாவது உலகக்கிண்ண உதைபந்தாட்டப்போட்டிகள் 1930 ம் ஆண்டு உருகுவே நாட்டில் இடம்பெற்றது. இதில் உருகுவே அணியே உலகக்கிண்ணத்தை சுவீகரித்துக்கொண்டது. அன்று முதல் 4 ஆண்டுகளுக்கு ஒரு தடவை உலகக் கிண்ண உதைபந்தாட்டப்போட்டிகள் உலகின் பல்வேறு நாடுகளில் இடம் பெற்றுள்ளன. இவ்விபரம் வருமாறு


**உலகக்கிண்ண உதைபந்தாட்டம்**

| போட்டி நடைபெற்ற நாடு | வெற்றிபெற்ற நாடு | ஆண்டு |
|---|---|---|
| 01. உருகுவே | உருகுவே | 1930 |
| 02. இத்தாலி | இத்தாலி | 1934 |
| 03. பிரான்ஸ் | இத்தாலி | 1938 |
| (1942,1946 இரண்டாம் உலகப்போர் காரணமாக போட்டிகள் நடைபெறவில்லை) | | |
| 04. பிரேஸில் | உருகுவே | 1950 |
| 05. சுவிற்சலாந்து | மே.ஜேர்மனி | 1954 |
| 06. சுவீடன் | பிரேசில் | 1958 |
| 07. சிலி | பிரேசில் | 1962 |
| 08. இங்கிலாந்து | இங்கிலாந்து | 1966 |
| 09. மெக்ஸிக்கோ | பிரேசில் | 1970 |
| 10. மே.ஜேர்மனி | மே.ஜேர்மனி | 1974 |
| 11. ஆர்ஜன்ரீனா | ஆர்ஜன்ரீனா | 1978 |
| 12. ஸ்பெயின் | இத்தாலி | 1982 |
| 13. மெக்ஸிக்கோ | ஆர்ஜன்ரீனா | 1986 |
| 14. இத்தாலி | மே.ஜேர்மனி | 1990 |
| 15. அமெரிக்கா | பிரேஸில் | 1994 |
| 16. பிரான்ஸ் | பிரான்ஸ் | 1998 |
| 17. தென்கொரியா ஜப்பான் | பிரேசில் | 2002 |
| 18. ஜேர்மனி | இத்தாலி | 2006 |
| 19. தென்னாபிரிக்கா | ஜேர்மனி | 2010 |
| 20. பிரேசில் | ஜேர்மனி | 2014 |
| 21. ரஸ்யா | பிரான்ஸ் | 2018 |

- 2018 ம் ஆண்டு யூன்மாதம் உலகக்கிண்ணஉதைபந்தாட்டப்போட்டிகள் ரஸ்யா வில் நடைபெற்றது.
- இப்போட்டிகளில் பல நாடுகள் பங்குபற்றி இருந்தாலும் அரை இறுதிச் சுற்றில் விளையாட பிரான்ஸ் பெல்ஜியம் இங்கிலாந்து குரேசியா ஆகிய நாட்டுஅணிகள் தகுதி பெற்றன.
- இறுதிச்சுற்றில் பிரான்ஸ் குரேசியா அணிகள் மோதின. இதில் பிரான்ஸ் 4 கோல்களையும் குரேசியா 2கோல்களையும் பெற்றதனுாடாக பிரான்ஸ் உலகக் கிண்ணத்தை தனதாக்கியது.
- 2018 உலகக்கிண்ணப்போட்டியில் சிறந்த விருதுகள் பெற்றோர் விபரம்

| இல. | பெயர் | அணி | விருது |
|---|---|---|---|
| 01 | திபாவ் | பெல்ஜியம்அணியின் கோல் காப்பாளர் | தங்கக்கையுறை (சிறந்த கோல் காப்பாளர்) |
| 02 | கரிகேன் | இங்கிலாந்து அணித்தலைவர் | தங்கக்காலணி (அதிக கோல்களை பதிவுசெய்தவருக்கான விருது) |
| 03 | லூக்கா மோவிக் | குரோசியஅணியின் தலைவர் | தங்கப்பந்து |
| 04 | கிலியான் மப்பே | பிரான்ஸ்நாட்டைச்சேர்ந்த 19 வயதுடைய வீரர் | இளம்வீரருக்கான விருது |

## 10. செவ்வாயில் வீசிய கடும் புயலால் செயலிழந்த ரோவர்



செவ்வாய் கிரகத்தில் ஆராய்ச்சி செய்வதற்காக நாசா அனுப்பிய ரோவர், மோசமான செவ்வாய் கிரக புயல் காரணமாக மொத்தமாக செயலிழந்துள்ளது. செவ்வாய் கிரகத்திற்கு நாசா "ரோவர்" என்ற ரோபோ வாகனத்தை அனுப்பி உள்ளது. இதன் பெயர் க்யூரியாசிட்டி. இது செவ்வாய் மீது நகர்ந்து செல்லும் சிறிய வாகனம் ஆகும். இந்த ரோவர் அங்கு சில ஆராய்ச்சிகளை செய்து முடிவுகளை பூமிக்கு அனுப்பி வருகிறது. தற்போது செவ்வாய் கிரக ஆராய்ச்சிகளை நாசா துரிதப் படுத்தி உள்ளது. உலகில் ஒரு விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் அனுப்பிய முதல் ரோவர் இதுதான்

இந்த ரோவர் இவ்வளவு நாட்களாக எல்லா புயலிலும் தாக்குப்பிடித்தது. செவ்வாய் கிரகம் அடிக்கடி புயல் ஏற்படும் கிரகம் என்பதால் அதற்கு ஏற்றாப் போலத்தான் வடிவமைக்கப்பட்டது இந்த க்யூரியாசிட்டி. இதனால் அதற்கு ஏற்றபடி, இந்த ரோவர் செயலாற்றி வந்தது. புயல் காரணமாக இதுவரை ஒருமுறை கூட ரோவர் செயலிழந்தது கிடையாது.

மிகவும் பெரிய புயல் யூன் 13 2018 இரவு செவ்வாய் கிரகத்தில் வீசியுள்ளது. இது வரை செவ்வாய் கிரக வரலாற்றில் வீசாத புயல் என்று கூறப்படுகிறது. செவ்வாயின் முக்கால் பகுதியை இந்த புயல் மொத்தமாக ஆக்கிரமித்திருந்தது.இந்த புயல் சில நாட்கள் செவ்வாய் கிரகத்தை சுற்றி சுற்றி வந்ததாக கூறப்படுகிறது.

இதனால் ரோவரின் தொடர்பு துண்டிக்கப்பட்டது. புயல் கொஞ்சம் கொஞ்சமாக ரோவரை நெருங்கி வரும் போது, அதை ரோவர் படம் பிடித்துள்ளது. ஆனால் கடைசி புகைப்படத்திற்கு பின் அதன் தொடர்பு துண்டிக்கப்பட்டுள்ளது. மொத்தமாக ரோவர் இயங்காமல் இருந்துள்ளது. யூன் 13 2018 பின் தொடர்பு கொண்டும் அதனிடம் இருந்து பதில் இல்லை.

ஆனால் அதன் பாகம் எதுவும் இதுவரை உடையவில்லை என்று நாசா கூறியுள்ளது. இதனால் அது மீண்டும் செயல்பட தொடங்கும் என்றும் கூறப்படுகிறது. அதில் பிரச்சனை ஏற்பட்டால் அதுவாக சரி செய்து கொள்ளும் வகையில்தான் உருவாக்கப்பட்டு இருக்கிறது.

# எழுதுங்கள் வெல்லுங்கள்

**போட்டி இல. 19 வினாக்கள்**

1. இலங்கையின் வடமாகாணத்தின் தலைநகரம் எது?
2. ஒல்லாந்து நாட்டின் தற்போதைய பெயர் என்ன?
3. வரிக்குதிரையிலுள்ள வரிகளின் நிறம் யாது?
4. அலெக்சாண்டர் கிரகாம் பெல் தொலைபேசியைக் கண்டுபிடித்த ஆண்டு எது?
5. 2018 ஆம் ஆண்டு நடைபெற்ற உலகக்கிண்ண உதைபந்தாட்டப்போட்டியில் வெற்றி பெற்ற நாடு எது?
6. அலெக்சாண்டர் கிரகாம் பெல்லின் மனைவி எவ்வகை மாற்றுத்திறனாளி?
7. ஓட்டிஸப்பாதிப்புக்கு உள்ளாகிய ஒருவர் உலகின் பலநகரங்களை தனது கண்பார்வைக்குள் வீழ்த்தி அவற்றை அப்படியே ஓவியமாக வரைந்து உலகப்புகழ் பெற்றுள்ளார். அவர் யார்?
8. சர்வதேச வெள்ளைப்பிரம்பு தினம் எப்போது அனுட்டிக்கப்படுகின்றது?
9. முதலாவது குளிர்கால பராலிம்பிக் போட்டி எப்போது எங்கே ஆரம்பமானது?
10. "இருகால்கள் மற்றும் முழங்கைக்குக் கீழுள்ள பகுதிகள் இல்லாதநிலையில் பிறந்து ஒருவர் நிழற்படக்கருவியை (கமரா) முழங்கைகளால் எடுத்து ஒருகைமீது கமராவை வைத்து வாயால் பட்டன்களை அழுத்தி படங்களைப் பிடித்து உலகோர் வியக்கத்தக்க வகையில் நிழல்படங்கள் எடுத்து அனைவரையும் ஆச்சரியப்படுத்தி வருகிறார்". இச்சாதனையாளரின் பெயர் என்ன?

**இவ் வினாக்களுக்குரிய சரியான விடைகளை மறுபக்கத்திலுள்ள புள்ளிக்கோட்டில் எழுதி 31.12.2018 க்கு முன்பதாக எமக்குக் கிடைக்கக் கூடியதாக அனுப்புங்கள்.**

**இப் படிவத்தில் எழுதி அனுப்பி வைக்கப்படும் விடைகள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும். சரியான விடைகளை எழுதி அனுப்பும் வெற்றியாளர்களுக்கு பரிசில்கள் வழங்கப்படும்.**

# எழுதுங்கள் வெல்லுங்கள்

**போட்டி இல. 19 விடைகள்**




01. ..........................................................

02. ..........................................................

03. ..........................................................

04. ..........................................................

05. ..........................................................

06. ..........................................................

07. ..........................................................

08. ..........................................................

09. ..........................................................

10. ..........................................................

1. முழுப் பெயர் : ..........................................................
2. தபால் முகவரி : ..........................................................
..........................................................
3. தொலைபேசி இல : ..........................................................
4. பிறந்த ஆண்டு மாதம் திகதி : ..........................................................

**போட்டி இல: 18 விடைகள்**

1. கொழும்பு கம்பகா களுத்துறை
2. பிரேசிலியா
3. நீலத்திமிங்கலம்
4. **James Webb telescope**
5. மார்ச் 24
6. கணிதத்துறை
7. புரட்டாதி இறுதி ஞாயிறு
8. மார்ச் 14 2018
9. லைப் வித்அவுட் லிமிட்
10. ஹெலன் அடம்ஸ் கெல்லர்

**அனுப்ப வேண்டிய முகவரி :**

எழுதுங்கள் வெல்லுங்கள்

**கருவி**


மாற்றுத்திறனாளிகளின் சமூக வள நிலையம்

இல : 1166/15, அருளம்பலம் ஒழுங்கை, நல்லூர் வடக்கு, யாழ்ப்பாணம்.

# முற்றத்து மல்லிகை

## விருட்சமாக வேண்டியவர் வினோதினி

நேர்காணல் : கணபதி சர்வானந்தா



ஓரிரு பிரச்சினைகளைத் தாண்டுவதே சிரமமாக இருக்கின்ற இவ்வுலகில் பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வாழ்வின் ஒரு எல்லையைக் கடந்திருப்பவர் வினோதினி ராஜரட்ணம். இத்தனைக்கும் பிறப்பிலிருந்தே அகத்தால் உலகத்தைப் பார்க்க நிர்ணயிக்கப்பட்ட அவர் ஒரு மாற்றுத்திறனாளியாவார். அத்துடன் யுத்தத்தின்போது தனது கால்களில் ஒன்றின் இயல்பையும் இழந்துவிட்டவர். கருவியின் நிகழ்வுகளில் அவ்வப்போது வந்து பங்குபற்றிச் செல்லுகின்ற அவரை நான் பலமுறை சந்தித்திருந்தாலும் கடந்த மாதம் அவர் கருவிக்கு வந்திருந்தபோதே என்னால் அவர் மனதைத் திறக்க முடிந்திருக்கிறது. இப்படியான மனிதர்களைச் சந்திக்கின்ற சந்தர்ப்பங்களில் என்னுள் பல கேள்விகள் எழுந்து நிற்கும். சிலவற்றிற்கு விடை கிடைக்கும். பலவற்றை விடைபெறாத கேள்விகளாக இதயத்தில் சுமையாக்கிக் கொண்டு நகர்ந்து கொள்ளுவது வழக்கம். வினோதியுடனான சந்திப்பும் அப்படித்தான் அமைந்திருந்ததென்றாலும் "வலு" வுக்கூடாக அவரது வலிமையைப் பேசப்போகின்றோம் என்ற திருப்தி என்னை ஆசுவாசப்படுத்திக் கொண்டது. தம்மை வலுவற்றவர்களாக எண்ணிக் கொள்ளுகின்றவர்களுக்கு இவர் கதையும் அவர் பெற்ற அனுபவமும் மிகவும் பெறுமதி வாய்ந்ததாகவும், அவர்கள் மேல் நோக்கிச் செல்ல ஒருவித உந்துதலை ஏற்படுத்தும் என்பதுவும் எமது நம்பிக்கை.

"சங்கீதத்துறையைத் தனதாக்கிக் கொள்ளுகின்ற அதே சமயம் தான் ஒரு சமூக சேவகியாகவும் வரவேண்டும்" என்ற ஆர்வத்திலேயே தனது கல்வியைத் தொடருவதாகச் சொல்லுகின்ற வினோதினி இராஜரட்ணத்திடம் "வலு" சஞ்சிகையின் முற்றத்து மல்லிகைக்காக அவர் பற்றிக் கேட்டோம்.

வணக்கம் வினோதினி. தற்போது என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள்? உங்கள் குடும்பம், உங்கள் கல்வி, நீங்கள் கொண்டுள்ள பிற முயற்சிகள் போன்ற விடயங்களை வலுவுக்காகச் சொல்லுங்கள்.

கொழும்பு பல்கலைக்கழகத்தில் கலைப்பீட மாணவியாக இருக்கிறேன். சமூகவியல் அரசியல் விஞ்ஞானம், புவியியல் என்பவைதான் எனது பாடங்கள். தற்போது. ஹைவ்லொக் பாக்கிலுள்ள பெண்கள் விடுதி ஒன்றிலிருந்து தினமும் முச்சக்கர

வண்டியில் கொழும்பு பல்கலைக் கழகத்துக்குப் போய்வருகிறேன். பல நல்ல உள்ளங்களின் அனுசர ணையிலும் இனிய வாழ்வு இல்லத்தின் அரவ ணைப்பிலும் எனது பயணம் தொடர்ந்து கொண் டிருக்கிறது. எனது கல்வி முயற்சியின் ஆரம்பம் இனியவாழ்வு இல்லத்திலேயே தொடங்கியது. என்போன்றோருக்கு மூலதனமாக இருக்கக்கூடிய பிரைல் எழுத்தை அங்கேயே கற்றுக்கொண்டேன்.

நான் ஒரு விவசாயக் குடும்பத்தில் பிறந்தவள். எனது அப்பா ஒரு விவசாயி.தற்சமயம் அவர் முது மையினால் குடும்பத்தைக் கொண்டு செலுத்துவதில் சிரமப்படுகிறார். எனது இளைய சகோதரன்தான் குடும்பத்தை வழி நடத்துகிறார் . குடும்பத்தில் 5 சகோ தரர்கள் 2 சகோதரிகள் அவர்களில் ஒரு சகோதரன் மாற்றுத் திறனாளியாக உள்ளார். பத்தாம் வகுப்புப் படித்துக் கொண்டிருந்த போது விபத்தொன்றில் அவர் இயல்பை இழந்தவர்.பழைய ஞாபகங்கள் எதுவும் அற்று அவர் வாழ்ந்து வருகிறார். பிறர் உதவியு டன்தான் அவர் தனது காரியங்களைச் செய்யமுடி யும்.. ஆதலால் சதா எதிர்நீச்சலோடு பயணிக்கின்ற வர்கள் நாங்கள்.

வல்லிபுனம் கனிஷ்ட வித்தியாலயத்தில் ஆரம்பக் கல்வியைக் கற்றேன். அது தற்போது முல்லைத்தீவு - வல்லிபுனம் மகாவித்தியாலயம் என்ற பெயரோடு அழைக்கப்படுகிறது. மேற்படிப்பை உடையார் கட்டு மகாவித்தியாலயத்தில் கற்று உயர்தரப் பரீட்சையில் சித்தியெய்திய பின்னரே பல்கலைக் கழகத்திற்குத் தேர்வானேன்.



2015 உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றி 2016 -2017 இல்தான் பல்கலைக் கழகத்தில் அனுமதி கிடைத்தது. தமிழ், சரித்திரம், சங்கீதம் மூன்றையும் உயர்தரத்தில் எனது பாடங்களாக வெறுமனே ஆறு மாதங்கள் மட்டுமே கற்று சித்தியடைந்து திறமை அடிப்ப டையில்தான் கொழும்பு பல்கலைக் கழகத்துக்குத் தெரிவாகினேன். அந்த ஆண்டு முல்லைத்தீவில் இருந்து பல்கலைக்குத் தெரிவானவர் நான் மட்டுமே. இது எனது பாட சாலைக்கு மட்டுமல்ல எனது கிராமத்துக்கும் பெருமையான விடயம்.அதுமட்டுமல்ல எனது கிராமத்திலிருந்து பல்கலைக் கழகத்துக்கு முதல் போனவர் என்ற பெருமை எனக்குரியது. தற்போது எங்கள் கிராமத்திலிருந்து ஐந்து பேர் சித்தியெய்தி பல்கலைக்குத் தெரிவாகியிருக்கின்றனர். நான் ஆறு மாதத்தில் உயர்தரம் கற்றது பெரிய விடயமல்ல கல்விப் பொதுத் தராதரச் சாதாரண தரத்திற்குரிய பாடங்களை ஒரேயொரு மாதத்தில் கற்று 2ஏ, 2பீ, 3எஸ் இனை பரீட்சை முடிவாகப் பெற்றதைச் சொல்லிச் சொல்லி சிரிக்கிறார் வினோதினி.



ஒன்பதாம் ஆண்டு படித்தபோது காயப் பட்டவர் . "யுத்தத்துக்கு முன்னதாக விளை யாட்டுகளில் பங்குபற்றி இருக்கிறேன். பத்தாம் பதினொராம் ஆண்டுக்குரிய புத்தகங்களைத் தனது கரங்கள் தொட்டும் பார்த்ததில்லை". என்கிறார் அவர். காலில் பட்ட காயத்தை ஒரு கையால் தடவிக் கொண்டு பாடத்திற்குரிய பிரைல் எழுத் துக்களை இன்னொரு கையால் தடவியபடி கல்வியைக் கற்றுத் தேர்ந்தவர். அப்படி வேதனையை அனுபவித்த காலங்களில் தான் அழுதபடியே வாழ்வைக் கழித்ததாகச் சொல்கிறார் வினோதினி. சங்கீதத்தின் அடிப்படைகளை இனிய வாழ்வு இல்லத்தில் கற்றவர் தற்பொழுது பல்கலைக்கழகப் படிப்புக்கு புறம்பாகத் தான் ஏற்கனவே கற்றுக் கொண்ட சங்கீத கல்வி அறிவைக் கொண்டு இந்தியப் பரீட்சை ஒன்றிற்குத் தோற்றவிருக்கிறார்.

பல்கலைக் கழக அனுமதி பெற்ற பின்னரே இவர் ஊரால் நன்கு அறியப்பட்டிருக் கிறார். அதன் பின்பு அந்தக் கிராமத்தில் நடைபெறும் அனைத்து நிகழ்வுகளிலும் தன்னைப் பங்குபற்ற அழைப்பதாகச் சொல்லிப் பெருமைப்படுகிறார். தற்போது விடுமுறைகளில் கிராமத்திற்குச் செல்கின்ற போதெல்லாம் அவரால் பல கிராமத்துக் குழந்தைகள் பயன் பெறுகின்றனர். அத்துடன் பல்கலைக்கழகத்தில் அனுமதி பெறுவ தற்கு முன்னராக இவர் தனது கிராமத்துச் சிறுவர்கள் நலன் கருதி அறநெறிப்பாடசாலை ஒன்றினை ஆரம்பித்தவர். விடுமுறையில் செல்லும்போது அதனையும் கவனித்து வருகிறார்.

"சாந்தபுரம் கிராமத்திலுள்ள அம்மன் கோயிலைப் புனரமைப்பைச் செய்தவர் எஸ்.கே.நாதன் என்ற வர்த்தகர். அந்தக் கோயிலிலேயே அந்த அறநெறிப்பாடசாலை நடைபெறுகிறது. நானும் எனது கிராமத்தவர்கள் ஐந்து பேரும் சேர்ந்து அந்தப் பாட சாலையை நடத்திவருகிறோம்.தேசிய மட்டத்தில் அந்தப் பாடசாலைக்கு விருது கிடைத் திருக்கிறது" என்று சொல்லும் வினோதினிக்கு இறுதி யுத்தத்தின்போது அவருக்கு ஏற் பட்ட பாதிப்பினைத்தான் அவரால் மறக்கமுடியாத சம்பவமாக நினைவுகூருகிறார். "அப்போதுதான் நான் என் காலின் வலுவை இழந்து போய்விட்டேன்" என்கிறார் வினோதினி.


இறுதி யுத்தம் உங்களுக்கு ஏற்படுத்திய உடல் காயம், மனக் காயம், வலு இழப்பு பற்றிக் குறிப்பிடுகின்ற நீங்கள் அப்போது உங்களுக்கு ஏற்பட்ட அனுபவத்தைப்பற்றிக் கொஞ்சம் வலு வாசகர்களோடு பகிர்ந்து கொள்ளலாமா? இது போன்ற விடயங்களை பிறரோடு பகிர்ந்து கொள்ளுவதால் மனம் சற்று லேசாகிவிடும் என்பது என து எண்ணம். என்ன சொல்லுகிறீர்கள், வினோதினி?

உண்மைதான். இறுதி யுத்தத்தின்போது நான் காயம்பட்ட தினம், இனிய வாழ்வு இல்லத்திலிருந்து வீட்டிற்கு வந்தேன்.வந்து சேர்ந்தபோது செல்வீச்சு தொடங்கியது. அப்போது என்ன செய்வதென்று அறியாது எல்லோரும் பல திசைகளிலும் சிதறி ஓடத் தொடங்கினர். யாரை யார் பற்றிக் கொள்வது என்று தெரியாத நிலைமை அது. இடையில்

எனது சகோதரி என்னைப் பிடித்துக் கொண்டார். தொடர்ந்து நாங்கள் ஓடிக்கொண்டிருந்த போது பொக்கணை என்ற இடத்தில் வைத்து எங்கள் இருவருக்கும் காயம் ஏற்பட்டது. காயப்பட்டதைக்கூட என்னால் உணரமுடியவில்லை. கடற்கரை மணலில் கால் புதைந்துவிட்டதாகத்தான் உணர்ந்தேன். அங்கு வைத்து எமக்கு முதல் உதவி கிடைத்த பின் கப்பலில் ஏற்றிப் புல்மோட்டைக்குக் கொண்டுசெல்லப்பட்டோம். அங்கிருந்து பதவியா, கந்தளாய் என ஒவ்வொரு ஆஸ்பத்திரியாக மாறிமாறி இருந்து கடைசியாகப் புல் மோட்டை அகதிகள் முகாமுக்குக் கொண்டுவரப்பட்டு அங்கு சில காலம் இருந்தோம். அங்கிருந்த அதிகாரிகளின் உதவியுடன் எல்லா முகாம்களுக்கும் கடிதம் போட்டோம். அதில் ஒன்று புதுக்குடியிருப்பு கிராம சேவகரிடம் கிடைத்து அவர் உதவியுடன் பல சிரமங்களுக்குப் பின்னர் மூன்று மாதகாலத்தில் எனது குடும்பத்தாரின் தொடர்பு எனக்குக் கிடைத்தது. குடும்பத்தாரோடு சேர்ந்தபோது அவர்கள் அழுதது இன்னும் எனது ஞாபகத்தில் இருக்கிறது - என்கிறார் வினோதினி.

மாற்றுத் திறனாளிகள் என்றதும் வலுவற்றவர்கள், அவர்கள் சாதாரண மனிதர்களைப்போல, செயற்பட முடியாதவர்கள் என்ற பொதுவான எண்ணம் பலரிடையே உண்டு. மாற்றுத் திறனாளிகளை ஊக்கமாக்கவல்லதாக. அவர்களுக்கு நம்பிக்கை யூட்டுவதாக என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?

என்னை வைத்து எனது அனுபவங்களை வைத்துத்தான் பிறருக்குப் புத்தி சொல்ல முடியும். உண்மையிலேயே நான் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் எனது படிப்பைத் தொடருவதைத்தான் விரும்பினேன். அங்குள்ள நுண்கலைத்துறையில் சங்கீதத்தைக் கற்றுக்கொள்ள வேண்டும் என்பதே எனது விருப்பம். ஆனால் எனக்கு யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் கிடைக்கவில்லை. அதற்குப் பதிலாகக் கொழும்புப் பல்கலைக் கழகமே எனக்குக் கிடைத்தது. உடனே பலர் "யாழ்ப்பாணத்துக்கு மாற்றுங்கள். கொழும்பில் நீங்கள் கஷ்டப்பட்டுப் போவீர்கள்."என்று சொன்னார்கள். ஆனால் என்ன துணிவோ தெரியாது கொழும்புக்கே போய்விட்டேன். அவர்கள் சொன்னதைப்போல கஷ்டம்தான். ஆங்கிலத்தை ஓரளவு சமாளிக்கலாம். தவிர எனக்குச் சிங்கள மொழி தெரியாது. அங்குள்ளவர்கள் அத்தனைபேரும் எனக்குப் புதியவர்கள். நண்பர்கள் என்று யாரும்



கிடையாது. என்னோடு படிக்க வந்தவர்கள் அனைவரும் என்னைவிட வயதில் குறைந்தவர்கள். ஏனென்றால் நான் வயதுக்கேற்றபடி பாடசாலைக்குப் போகவில்லை. இடையிட்டுப் பல வருடங்கள் எனது வாழ்க்கை வைத்தியசாலையோடு கழிந்துபோயிற்று. எனது காலில் மாத்திரம் இருபத்தைந்து சத்திர சிகிச்சை செய்யப்பட்டிருக்கிறது.

ஆனால் இப்போது எல்லாம் தொடக்கத்தைப்போல இல்லை. நான் இருக்கும் விடுதியில் என்னோடு ஒரு தமிழ் பெண்ணும் இருக்கிறார். அவரும் ஒரு மாற்றுத் திறனாளி. அவர் எனக்கு அதிகம் உதவுகிறார். அவர் மட்டுமல்ல மூவினத்தவரும்

அங்கிருக்கிறார்கள்.எல்லோரும் எல்லோருக்கும் உதவும் பண்பு அங்கு உண்டு. அவர்கள் மட்டுமல்ல பல்கலைக் கழகத்தில் பணியாற்றுகின்றவர்கள் தொட்டு அங்கு கற்பிக்கின்ற ஆசிரியர்கள்வரை அனைவரும் எனக்கு உதவுகிறார்கள். அங்கு மாடிக் குச் செல்ல லிப்ட் வசதி இருந்தாலும் சிலவேளைகளில் சன நெரிசல் காரணமாகப் படிகளில் ஏறி இறங்க வேண்டிய சந்தர்ப்பமும் உண்டு.எனது வலுவற்ற கால்களோடு படிகளில் ஏறி இறங்கி செல்லுகிறேன். மொத்தம் நாற்பத்தெட்டுப் படிகள் அங்கு உண்டு. மாற்றுத்திறனாளி என்றவுடன் எல்லோரும் குறைத்து மதிப்பிடுகின்றனர். நான் அங்கு செல்லக் காரணம் எனக்கு எல்லா மொழிகளிலும் பரீட்சையம் ஏற்படும். எல்லா மொழிகளையும் கற்கலாம்.இலங்கையிலுள்ள பிரதான மொழிகளோடு அங்கு பிரெஞ், ஜப்பானிய மொழி என்றெல்லாம் படிப்பிக்கிறார்கள். அத்துடன் எனக்குப் பாடமுடியும் என்றபடியால் பல போட்டிகளில் பாடி விருதுகளையும், கேடயங்களையும் பெற்றிருக்கி றேன். இலங்கைச் சாஹித்திய விருது விழாவிலும் பங்கெடுத்துப் பரிசைப் பெற்றிருக் கிறேன். இனிமேல் யாருக்காவது கொழும்புப் பல்கலைக் கழகம் கிடைக்குமாயின் அவர்களை நான் அங்கு செல்லுமாறு ஊக்குவிப்பேன் - என்று உற்சாகமாகச் சொல்லுகிறார் வினோதினி.

வினோதினிக்குக் கிடைக்கின்ற உதவிகள் சிலவேளைகளில் அவர் செலவுக்குப் போதாமல் இருப்பதாகவும், தினமும் அவர் தங்கியுள்ள விடுதியிலிருந்து பல்கலைக் கழகத்திற்கு முச்சக்கரவண்டியிலேயே பயணிப்பதாகவும், இடையிடையே அவர் கல்விக்கான புத்தகங்கள், உபகரணங்கள், போட்டோ பிரதிகள் எடுப்பது என்று பல எதிர்பாராத செலவுகள் ஏற்படுவதாகவும் சொன்னார் வினோதினி.இருந்தும் தனது இலட்சியங்களைச் சென்றடைய வேண்டும். குடும்பத்தார்க்கு ஆதாரமாக இருப்பதற் கான தொழில்துறை ஒன்றினைச் சென்றடைய வேண்டும் என்பதில் கண்ணுங் கருத்துமாகச் செயற்படுவதால் தனது செலவுகளை ஒறுத்துச் சீவிப்பதாகவும் அதனா லேயே எதனையும் எதிர்கொள்ளக் கூடியதாக இருப்பதாகவும் சொன்னார் வினோ தினி.மனித நேயமுள்ளவர்கள் மனம் வைத்தால் பல வினோதிகளின் வாழ்வு விருட்சமாவதோடு வெளிச்சமும் ஆகலாம்.


# கருவி – கொடித் திங்கள்

**16 ஓகஸ்ட் 2018 தொடக்கம் 15 ஒக்டோபர் 2018**

**உங்கள் கருணைக்கரம்**
**எங்கள் வாழ்வின் பலம்**



பகுதி 2

பராலிம்பிக் போட்டி பற்றி....

# "நம்பிக்கை" இருக்கும்போது இடது கை எதற்கு? - சுகில் அப்பாஸ்


விளையாட்டு வீரர்களுக்கே உரிய உழைப்பு, ஆர்வம், அர்ப்பணிப்பு அனைத்தையும் கொண்டு, பரபரவென்று தீயைப்போல பயிற்சி பெற்றுக் கொண்டிருக்கிறார் சுகில் அப்பாஸ். பேசும்போது அவ்வளவு அமைதியாக இருக்கும் சுகில், விளையாட்டு என்று வந்துவிட்டால் அதிரடியாக ஆடி பதக்கங்களைத் தன் வசம் ஆக்கிக்கொள்வார்!

இன்று இந்தியாவின் பரா பாட்மின்டன் விளையாட்டில் தவிர்க்க முடியாத பெயர் சுகில் அப்பாஸ். ஈரோடு மாவட்டத்தைச் சேர்ந்த இவருக்குப் பிறக்கும் போதே இடக்கை இல்லை. எனவே, வலதுகையால் தன்னுடைய பதின்ம வயதில் பாட்மின்ரன் விளையாடத் தொடங்கியிருக்கிறார். கொஞ்சம் கொஞ்சமாக மாநில அளவு, தேசிய அளவு என்று ஆரம்பித்த இவரது பாட்மின்ரன் பயணம், இந்தோனேசியா, உகாண்டா, ஸ்பெயின், ஆசிய விளையாட்டுப் போட்டி என்று விரிந்தது. இன்று சர்வதேச அளவில் இரண்டு வெண்கலப்பதக்கங்கள், மூன்று வெள்ளிப்பதக்கங்கள் என்று சாதனைகள் புரிந்துகொண்டிருக்கிறார் சுகில்!

பத்தொன்பது வயதில் தொழில் முறை விளையாட்டு வீரராகக் களமிறங்கிய சுகில் கடந்து வந்த பாதை முட்கள் நிறைந்தது.

சுகிலின் தந்தை அப்பாஸ் அச்சகம் ஒன்றில் பணிபுரிகிறார். அம்மா இல்லத்தரசி. திறமை இருந்தாலும் தான் பயிற்சி பெறவும், தன்னுடைய அன்றாடத் தேவைகளைப் பூர்த்திசெய்துகொள்ளவும் சுகிலுக்கு பண உதவி தேவைப்படுகிறது. மாற்றுத்திறனாளி என்றாலும் மனம் தளர்ந்து போகாமல், தனியார் பாட்மின்ரன் அகடமிகளில் சிறுவர்களுக்கு பயிற்சியளித்து, அதன்மூலம் ஆறாயிரம் ஏழாயிரம் என மாதந்தோறும் பெற்று நிலைமையைச் சமாளித்து வந்துள்ளார். நாஷனல் விளையாடும்போது சாய்னா நேவால், பி.வி.சிந்து ஆகிய வீரர்களை உருவாக்கிய கோபிசந்த் அகடமியில் பயிற்சி பெற சுகிலுக்கு வாய்ப்புக் கிடைத்





துள்ளது, அதற்கும் பல மாதங்கள் போராடவேண்டி இருந்துள்ளது. முதலில் அங்கு பயிற்சிக்கட்டணம் பெறப்பட்டாலும், சர்வதேசப் போட்டிகளில் பதக்கம் வெல்ல ஆரம்பித்தபின், இப்போது சுகிலுக்கு பயிற்சி இலவசமாக வழங்கப்படுகிறது.

சர்வதேச தரவரிசையில் தற்போது 16வது இடத்துக்கு முன்னேறியிருக்கும் சுகில், சர்வதேசப் போட்டிகளுக்குச் செல்ல வேண்டும் மற்றும் 2020-ம் ஆண்டு ஜப்பானில் நடைபெறவிருக்கும் பராலிம்பிக் போட்டியில் பதக்கம் வெல்ல வேண்டும் என்பதே சுகிலின் பெருங் கனவு. பராலிம்பிக் போட்டிகளுக்குத் தகுதியடைய சுகில் இன்னும் பதினான்கிற்கும் மேற்பட்ட சர்வதேசப் போட்டிகளில் பங்கு பெற்றாக வேண்டும்.

ஆக குறைந்த பட்சம், ஒருவருடத்துக்கு 6 சர்வதேசப் போட்டிகளிலாவது



பங்கேற்றால் மட்டுமே பராலிம்பிக் போட்டியில் தகுதி பெறமுடியும். இவ்வருடம் இதுவரை நடந்து முடிந்துள்ள 4 போட்டிகளில் 2-ல் மட்டுமே நான் பங்கேற்றுள்ளேன். மீதி இரண்டு போட்டிகளுக்குச் செல்ல நிதியுதவி கிடைக்கவில்லை. இந்த வருடம் 2 சர்வதேசப் போட்டிகள் மட்டுமே மீதமுள்ள நிலையில், டென்மார்க் போட்டியிலும், ஆஸ்திரேலியப் போட்டியிலும் பங்குபெறுவது கட்டாயமாகும்!" - சுகில்.

சர்வதேசப் போட்டிகளில் பங்குபெற சுகிலுக்கு நிதியுதவி தேவைப்படுகிறது. நிதியுதவி பற்றாக்குறை காரணமாக, கனவுகளும், திறமையும் மறைந்துவிடும் சூழ்நிலையில்தான் தற்போது சுகிலின் நிலைமை.

சர்வதேசப் போட்டிகளில் விளையாட எனக்கு ஸ்பொன்சர்கள் யாரும் இல்லை. என் நண்பர்களிடம்தான் பண உதவி கேட்கலாம் என இருக்கிறேன். அரசு எங்களுக்கு உதவிகளைச் செய்து வந்தாலும், சர்வதேசப் போட்டிகளில் கலந்துகொள்வதற்கு எங்களின் செலவிலேயே செல்லவேண்டியுள்ளது." என்கிறார் சுகில்

எத்தனையோ ரூபாக்களை எது வெதுக்கோ செலவு செய்யும் அரச மற்றும் தனியார் நிறுவனங்கள் சுகில் அப்பாஸ் போன்றோரைத் தூக்கிவிடுமானால் நாட்டுக்கும், வீட்டுக்கும் பெருமை சேர்க்கலாம். •



# வலுவிடம் கேளுங்கள்



**வலுவிழந்தவர்கள் பொருத்தமான வேலைகள் இருந்தும் அவற்றை பெறமுடியாதநிலையில் காணப்படுவதாக மனக்குறைபடுகின்றார்கள். இது பற்றி உங்கள் கருத்து என்ன?**

**-கண்ணன், முல்லைத்தீவு**

வலுவிழந்தவர்கள் ஆற்றக்கூடிய பொருத்தமான வேலைகள் இருக்கின்றன என்பதில் நமக்கு மிகுந்த உடன்பாடு உண்டு. உதாரணமாகச் சொல்வதாயின் போக்குவரத்துச் சேவைப் பகுதியில் கால் பாதிப்புற்ற ஒரு நபர் நேரக் காப்பாளராக பணி செய்ய முடியும். ஆனால் கால் பாதிப்புற்ற கடமைகளை ஆற்றக்கூடிய எத்தனை பேர் இத் தன்மைக்குட்பட்ட வேலைகளில் அமர்த்தப்பட்டு இருக்கிறார்கள் என்பது கேள்விக் குரியதாகவே இருக்கின்றது. இந்த விடயத்தில் இன்னோர் அம்சத்தையும் நாம் கருத்தில் எடுக்க வேண்டியுள்ளது. தமது உடற்குறைகளைக் காரணம் காட்டிக்கொண்டு தமக்கு குறித்து ஒதுக்கப்பட்ட கடமைகளை ஆற்றாமல் இருக்கின்ற வலுவிழந்தவர்களையும் நாம் காண்கின்றோம். இத்தகையவர்களின் நடத்தை சீராக கடமைகளை ஆற்றுகின்ற வலு விழந்தவர்களையும் பாதிப்படையச் செய்யும். இதனைக் கருத்தில் கொண்டு வலு விழந்தவர்களும் வேலைகளுக்குப் பொருத்தப்பாடு உடையவர்களாக தங்களை இசை வாக்கிக் கொள்ள வேண்டும். இரண்டு கைகள் இணைகின்ற போதுதான் சத்தம் எழு கின்றது. வேலைதருனர்களும் வலுவிழந்த வேலை பெறுனர்களும் உடன்பாட்டோடு பணி செய்கின்ற போதுதான் ஆரோக்கியமான வேலைச் சூழல் உருவாகின்றது.



# நன்றி சொல்ல உனக்கு வார்த்தையில்லை எனக்கு

## சிறுகதை



"நீங்கள் இப்போது முந்தினமாதிரி இல்லை, ஏதோ வேண்டா வெறுப்பாத் தான் எல்லாவற்றையும் செய்யுற மாதிரி எனக்குத் தெரியுது..." என்று சொல்லிக் கொண்டிருந்த தமயந்திக்கு அதற்குமேல் வார்த்தைகள் தொண்டையிலிருந்து வெளியே வராமல் தடைப்பட்டுக் கொண் டன. வார்த்தைகளுக்குப் பதிலாக விக்க லும்,விம்மலும் தான் வெளியே வந்தன. அவளுடைய அழகான நீண்ட விழிக ளின் ஓரங்களில் கண்ணீர்கட்டி நின்று எந்நேரமும் கன்னங்களில் வழிந் தோடத் தயாராகிக் கொண்டு இருந்தது.

பாதுகாப்புப்படையில் கப்டன் தரத்தில் இருக்கிற தமயந்தியின் கண வன் கருணாரட்ண போன வாரந்தான் விடுப்பில் வீட்டுக்கு வந்திருந்தான். அவர்களுடைய இரண்டு வயது கூட நிரம்பாத பெண்குழந்தை தகப்பனின் மடியில் இருந்து கொண்டு, தான் கற் றுக்கொண்ட சில வார்த்தைகளை மீண் டும் மீண்டும் சொல்லிக் கொண்டி ருந்தாள். அம்மாவின் உள்ளக் குமுறலும் அப்பாவின் அமைதியும் சிரோமினியின் சொற்பயிற்சியை எந்த வகையிலும் இடையூறு செய்ய இடமில்லை. இதைத்தான் பிள்ளமை அல்லது குழந்தைத்தனம் என்கிறார்கள்.

கிட்டத்தட்ட 7வருடங்களுக்கு மேல் இராணுவ சேவையில் இருக் கின்ற கருணாரட்ணாவின் நடவடிக்கை கள் எல்லாமே கட்டுப்பாடும் கடும்போக் கும் உடையதாகவே மாறி இருந்தன.

அவர்களுக்கு திருமணமாகி 5 ஆண்டு கள் ஓடிவிட்டன. கருணாரட்ண கல்லூரி யிற் படித்துக் கொண்டிருந்த காலத்தி லேயே தமயந்தியை விரட்டி விரட்டி காதலித்தான். தமயந்தி அதற்கொல்லாம் இலேசில் மசிந்து கொடுக்கவில்லை. வறுமையான குடும்பத்தில் பிறந்தவள் தன்னுடைய கல்வியிலே கருத்தாக இருந்தாள். எப்படியும் உயர்தரத்தில் சித்தியடைந்து ஒருவேலைக்குச் சேர்ந்துவிட வேண்டும். இதற்கு மேல் அவளைப் பல்கலைக்கழகத்திற்கு அனுப்பி படிக்கவைப்பதற்கு அவளுடைய பெற்றோரால் இயலாது. அவளுக்குக் கீழே இன்னும் 2 தங்கைகளுக்கு ஒரு

தம்பி யும் இருக்கிறார்கள். அப்பா ஒரு ஒப்பந் தக்காரரின் கீழ் வேலை செய்யும் பத்துப்பேரோடு ஒருவராக இருக்கிறார். அவருடைய வருமானம் மேலதிக செலவுகளுக்கு பற்றாக்குறையாக இருந் தது. தமயந்தி பெண்பிள்ளையாக இருப்ப தால் வீட்டிலுள்ள கஷ்ட நஷ்டங்களை நன்றாகவே தெரிந்து வைத்திருந்தாள்.

கருணாரட்ண விடாக்கண்ட னாகவும் தொடர்ந்து கொண்டே இருந் தான். அவன் தனக்காகப் பட்டுவருகிற பாடுகளையெல்லாம் பார்த்துக் கொண்டு தமயந்தியால் தொடர்ந்து விலகிச்செல்ல முடியவில்லை. அவளுடைய பருவ வய தும் பெண்மனமும் சேர்ந்து கருணா ரட்ணாவின் காதலுக்குப் பச்சைக்கொடி காட்டிவிட்டது. எந்நேரமும் துருதுரு வென்றிருக்கும் தமயந்தியின் கண்கள் அனேகமாக ஒருநாள் ஒருதரமேனும் அவனின் தரிசனத்திற்காக எதிர்பார்க்கிற அளவிற்கு அவர்களின் தொடர்பு வளர்ந்தது.

காதலிக்கிற இருவரும் கூடியவரை கருத்தொருமித்தவராக இருந்தால் மட்டுமே அந்தக்காதல் நல்ல முடிவை எட்டமுடியும். திருமணத்தைப் பற்றி யோசிப்பதற்கு முன்னதாக இருவரும் ஒருவேலையிற் சேர்ந்துவிட வேண்டு மென்பதில் உறுதியாக இருந்தார்கள். அவர்களுடைய முயற்சியும் நம்பிக்கையும் வீண்போகவில்லை. இந்த விசயத்திலும் தமயந்தி முந்திக் கொண்டாள். அவளுக்கு அரசாங்க அலுவலகத்தில் ஒரு உத்தியோகம் கிடைத்து விட்டது. கருணாரட்ண தீவிரமாக முயற்சி எடுத்தாலும் அவனுக்கு வேலை வாய்ப்புக்கிட்டவில்லை. அப்போது தான் "இராணுவத்திற்கு ஆட்சேர்ப்பு" நடக்கிறது என்ற தகவலை பத்திரிகையில் படித்தான். அவன் எதற்காகவும் யாருடைய ஆலோசனைக்காகவும் காத்திராமல் இராணுவத்தில் சேர்ந்து கொண்டான்.

தனது காதலுக்காக இராணுவத்தில் சேர்ந்து கொண்ட கருணாரட்ணாவின் உறுதியைக் கண்டு தமயந்தி பூரித்துப் போனாள். இராணுவத்தில் பணியாற்று வதில் உள்ள இடர்பாடுகளை அவள் அறிந்திருந்தாள். ஆனாலும் நாட்டிற்காக நல்ல பணி செய்கிற ஒருவனோடு வாழ்வது தனக்கு இரட்டிப்பு அர்த்தமுள்ள வாழ்வாக அமையப் போகிறது என நம்பினாள். காலமும் நேரமும் கனிந்து வர இருவரின் திருமணமும் இனிதே நடந்தேறியது. அவர்களுடைய மகிழ்ச்சி யான வாழ்வின் அடையாளமாக சிரோமினி பிறந்தாள்.


பொதுவாகவே வறுமைக்கோட்டில் இருப்பவர்கள் கொஞ்சம் மேலே முன்னே றுவதை பலர் சகித்துக் கொள்ளுவ தில்லை. இப்படி சகித்துக் கொள்ளாத வர்களின் வயிற்றெரிச்சலோ அல்லது கிரகங்களின் பெயர்வுகளோ தெரிய வில்லை, இப்போதெல்லாம் தமயந்தியின் கண் பார்வை சரியாக இல்லை. கருணா ரட்ணாவை அலைய வைத்து கட்டிப் போட்ட அவளுடைய அழகிய விழிகள் ஒளியிழந்து கொண்டு வந்தன. மருத்து வர்களின் நிபுணத்துவத்திற்கு அப்பால் தனது இருப்பைச் சில இடங்களில் இறை வன் நிறுவிக்காட்டிக் கொண்டே இருக்கிறான்.

தமயந்திக்குச் செய்யப்பட்ட கண்சிகிச் சைகள் எல்லாம் வீண் பண விரய மாகவே முடிந்தன. படிப்படியாக அவள் பார்வையை தொலைத்துக் கொண்டி ருந்தாள். காலக்கிரமத்தில் பார்வைக் குறைவு இயலாமையுடன் கூடிய ஒரு மாற்றுத்திறனாளி என்று ஆகிவிட்டாள். இருந்தாலும் அவளை மாற்றுத்திறனாளி களுக்குரிய சலுகைகள், உரிமைகள் என்பவற்றைக் கருதி தொடர்ந்து வேலையில் இருக்க அனுமதித்தார்கள். அவளும் தற்போதுள்ள தொடர்பாடல் நுணுக்கங்களையெல்லாம் கூடிய விரைவில் கற்றுக் கொண்டாள். தனது அலுவலக வேலைகளை முடிந்தவரை சரியாக செய்யவும் பழக்கப்படுத்திக் கொண்டாள்.

கருணாரட்ணாவும் வாய்ப்புகள் கிடைக்கிறபோதெல்லாம் விடுப்பு எடுத்துக் கொண்டு வீட்டிற்கு வந்து விடுவான். தமயந்தி தனது அலுவல் களையெல்லாம் தானாகவே செய்து கொள்ள வேண்டுமென அவன் விரும் பினான். அதற்காக அவன் எடுத்துக் கொண்ட முயற்சிகள் தமயந்தியை பொறுத்த வரையிற் இராணுவ பாணியிலான கடும் போக்குடன் இருந் தன. மேலும் தமயந்தியை அலட்சியப் படுத்துவது போலவும் தனிமைப்படுத்தி விட்டது போலவும் இருந்தன. இவை யெல்லாவற்றையும் தமயந்தியால் சகித்து கொள்ள முடியவில்லை. அதனு டைய பிரதிபலிப்பாகவே இப்போது அவள் கணவனிடம் தனது ஆதங்கத் தையெல்லாம் கொட்டித் தீர்க்கிறாள். ஆனால் கருணாரட்ண எதற்கும் வளைந்து கொடுப்பவனாகத் தெரியவில்லை.

அன்று காலையில் தமயந்தி தனது அலுவலகத்திற்குப் புறப்பட்டாள். வீட்டில் மோட்டார் சைக்கிள் ஒன்று இருக்கிறது. அதிற் தன்னை ஏற்றிக் கொண்டுபோய் அலுவலகத்தில் விட்டால் இவருக்கு என்ன, குறைந்து விடப்போகிறது. ஆனாற் கணவன் குழந்தை சிரோமி ணியை தூக்கி வைத்துக் கொண்டு அவளது பிஞ்சுக் கையைப் பற்றி அம்மா விற்கு டாட்டா காட்ட சொல்லிக் கொடுத்தான். தனது ஆற்றாமையை அடக்கிக் கொண்டு பஸ் நிலையத்திற்கு தனது வெள்ளைப் பிரம்பை தட்டியபடி நடந்தாள். இந்த வாரம் முழுவதும் இதற்கு முன்பும் இதே கதைதான் நடந்து கொண்டு இருக்கிறது.

பஸ்தரிப்பு நிலையத்தில் நின்ற தமயந்தியை வழக்கமான நடத்துனர் பேருந்தில் ஏற்றிக் கொண்டார். அன்று என்னவோ தெரியவில்லை கூட்டநெரிசல் குறைவாகவே இருந்தது. நடத்துனர் பேச்சுக் கொடுக்கக் கூடிய தூரத்தில் ஒரு இருக்கை தமயந்திக்குக் கிடைத்தது. யாரோ ஒரு நல்ல மனிதர் எழுந்து இருக்கையை கொடுத்து உதவினார். இந்த நடத்துனர் அவளுக்கு நன்றாகப் பழக்கமானவர் என்பது மட்டுமன்றி வாய்ப்புக் கிடைக்கும் போதெல்லாம் இருவரும் சில வார்த்தைகளையும் பரி மாறிக் கொள்வார்கள். இன்றைக்கு நடத்துனருக்கு ஏதோ ஒன்றை தமயந்தி யிடம் கேட்டு விட வேண்டுமென்று அங்கலாய்ப்பாக இருந்தது. வாய்ப்பும் வசதியும் சரியாகவே இருக்கவே அவர் கேட்டே விட்டார்.



“நோனா, நீங்கள் பஸ்ஸிலிருந்து இறங்கி அலுவலகத்திற்கு போகிற இடத்தில ஒருவர் மோட்டார் சைக்கிளில் ஒரு பிள்ளையோடு இப்ப நாலைந்து நாட்களாக நின்று கவனிக்கிறார். நீங்கள் சரியாக அலுவலகத்திற்கு உள்ளே போன பின்னர் திரும்பி சென்று விடுகிறார். அது உங்கள் கணவராக இருக்குமோ...!” என்று அவர் பேச்சுக் கொடுத்தார். தமயந்தி அவருடைய கேள்வியினால் உசுப்பிவிடப்பட்டாள். தனது கணவன் தன்னை மோட்டார் சைக்கிளில் ஏற்றிவர மறுத்து விடுகிறார். ஆனாலும் பஸ்வண்டியை தொடர்ந்து வந்து நான் சரியாக அலுவலகத்திற்குள் பிரவேசிப்பதை கவனிக்கிறார். இப்படி யோசிக்கத் தொடங்கியவளை மீண்டும் வழமைக்கு திருப்புவது போல, அவர் உங்கள் கணவன் தானே? ஏன்று சொல்லி நடத்துனர் சிரித்தார். தான் முயன்று கண்டறிந்த உண்மைக்காக அவர் தன்னைத்தானே பாராட்டிக் கொள்வதாக அந்தச் சிரிப்பு இருந்தது.

தமயந்தி ஆமாம் ஆமாம் என்று வாயினால் பதில் சொன்னாளே தவிர அவளுடைய மனம் முழுமையாக கணவனின் அன்புவெள்ளத்தில் மூழ்கித் திக்குமுக்காடிக் கொண்டிருந்தது. கணவனுடைய காதலையும் கரிசனையையும் அறியாத அசட்டுப் பெண்ணாக இருந்து விட்டேனே! என்று வருத்தப்பட்டாள். அவன் தன்னை விரட்டி விரட்டிக் காதலித்த அந்த நாட்களை நினைவிற்கு கொண்டு வந்தாள். அதற்கிடையில் அவளை இறக்க வேண்டிய இடம் வந்து விட்டது நடத்துனர் நிறுத்துவதற்காக மணியை அடித்துவிட்டுச் சொன்னார்.

“நோனா அலுவலகம் வந்து விட்டது பார்த்து கவனமாக இறங்குங்க”, என்றார். அவள் பேருந்தை விட்டு இறங்கினாள். தனது கணவனும் சிரோமினியும் எந்தப் பக்கம் நிற்கிறார்கள் என்பதை பார்க்க வேண்டும் போல இருந்தது. ஆனால் அந்தப் பார்வை அவளுக்குக் கிட்டவில்லை. அலுவலகத்தில் அன்று வேலை ஓடவில்லை. வேலை முடிந்து எப்படா வீட்டுக்குப் போவேன். கணவனைக் கட்டிப் பிடித்துக் கொண்டு அழுது தீர்ப்பேன். அவரைப் புரிந்து கொள்ளாமல் மனதை நோகடித்ததற்காக மன்னிப்புக் கேட்பேன். இப்படியெல்லாம் பலவாறாக எண்ணிக் கொண்டே இருந்தாள்.

**த.சிவராசா**
நாவற்குழி.



# வலு தரும் ஜோதிடம்

ஜோதிடர்
"வித்யாரத்னா"
(V.A.சிவராசா,
B.A,B.phil,Dip.in.Edu)

## விண்ணில் வியாழ மாற்றம் மண்ணில் உங்கள் யோகபலன்

**(4.10.2018-4.10.2019)**



### 1. மேடம் (அஸ்வினி, பரணி, கார்த்திகை 1)

கடவுளே அட்டமத்து வியாழன் வருகின்றார். வாலி பட்டமிழந்தது போல உங்கள் பதவிக்கும் நடத்தைக்கும் கேடு உண்டாகலாம். வியாழக் கிழமைகளில் தெட்சணாமூர்த்திக்கு அர்ச்சனை வழிபாடு செய்து வர கண்ணிற்கு வந்தது புருவத்துடன் போய்விடலாம். எவருக்கும் பொறுப்பின்றி எதையும் கொடுக்க வேண்டாம். வெளியூர் பிரயாணத்தை இடை நடுவில் கைவிட வேண்டி நேரிடலாம். பாலியல் நாடகங்கள் அரங்கேறலாம். வாகன விபத்தில் எச்சரிக்கையாக இருங்கள். பெற்றோர்களின் தேகநலம் பாதிக்கப்படலாம். திட்டமிடாத செயல்களினால் வாழ்க்கை படுவீட்சி அடையலாம். மின்சாரம் பற்றி மிகமிக எச்சரிக்கையாக இருங்கள். 4.10.2018 தொடக்கம் 4.10.2019 வரை வியாழமாற்றம் கெடுதலான பலன்களைத் தந்து விடலாம்.



### 2. இடபம் (கார்த்திகை 2,3,4, ரோகிணி, மிருகசீரிடம்1,2)

வச்சிரமாமுனிவரை விலங்கிலே மாட்டிய 6ம் இடத்து வியாழன் 4.10.2018 இல் நீங்கி விடுவதினால் எடுத்த காரியங்கள் நிச்சயம் வெற்றியைத் தரும். திருமணம் நிறைவேறும். வெளியூர் பயணம் அந்த மாதிரி பலன் கொடுக்கும். கைவிட்ட உறவுகள் நாடி, தேடி, ஓடி வரும். பொறுப்பின்றி கொடுத்த கடன் தெய்வ செயலால் கிட்டும். பென்சனுக்குப் பின்னும் மீள்நியமனம் கிடைக்கும். கணவன் மனைவி உறவில் ஏற்பட்ட விரிசல் நீங்கிவிடும். இடைத்தங்கல் நாட்டில் உறைவோர் விரும்பிய இடங்களைச் சென்றடைவர். புதிய ஜீவன் உருவாகும். கலைஞர்கள், விளையாட்டுத்துறையினர் பரிசில்கள் பாராட்டுப் பெறுவார்கள். கல்விப்புலத்தில் சாதனை புரிவீர்கள். விவசாய முயற்சிகள் லாபந்தரும். வாகன யோகமுண்டாகும்.



**3.மிதுனம் (மிருகசீரிடம்3,4, திருவாதிரை, புனர்பூசம் 123)**

வச்சிரமாமுனிவரை விலங்கு பூண வைத்த ஆறில் வியாழன் 4.10.2018 தொடக்கம் ஒருவருடத்திற்கு உங்களை ஆட்டிப்படைக்கப் போகின்றார். வங்கிக்கணக்கிலும் காணி உறுதியிலும் மோசடிகள் ஏற்படலாம். செய்யாத குற்றத்திற்கு தண்டனை அனுபவிக்கலாம். சகோதரார்களுடனான மாறுபட்ட மனப்போக்கினால் உறவுகள் கெட்டுவிடலாம். திருடர்கள் பற்றி மிக விழிப்பாக இருக்கவும். வாகனப் பயணத்தில் அதிகூடிய கவனம் எடுக்கவும்.விலங்குகள் குறுக்கே பாய்ந்து விபத்தினை ஏற்படுத்தலாம். புதிய நட்பினை முளையிலே கிள்ளி விடலாமெனினும் அவர்களின் உபத்திரவம் நிழல் போலத் தொடரும். கணவன் மனைவி மத்தியில் சந்தேகக்கோடு ஏற்பட்டு பிணக்குகள் வலுக்கும். அதிஷ்டலாபச் சீட்டு (சுவீப்) மூலம் அதிர்ஷ்டமுண்டு. கால்நடைகள் வளர்ப்பில் கவனம் செலுத்தும் விருப்பமேற்படலாம்.



**4.கற்கடகம் (புனர்பூசம் 4,பூசம், ஆயிலியம்)**

தர்மபுத்திரரை வனவாசஞ் செல்ல வைத்த 4 இல் இருந்த வியாழன் தெய்வச் செயலாக நீங்கி 5ம் இடக்கோசர நிலைக்கு குருபகவான் வருகின்றார். விவாகம் நிறைவேறி குழந்தைப்பாக்கியம் ஏற்படும். வெளிநாட்டுப் பிரயாணம் அந்தமாதிரி வெற்றிதரும். பிரிந்திருந்த காதல் ஜோடிகள் மீண்டும் ஒன்று சேர்வர். நீண்ட காலத்தின் பின்னர் சொந்தக் காணியில் கால்பதிப்பர். புதிய வீடு கட்ட இடம் தெரிவு செய்வர். களவு போனவை மீண்டும் கைகெட்டும். மாமன்மார் உறவினால் வசந்தகாலம் பிறக்கும். திருமண நிமித்தம் வெளிநாட்டு மணமக்கள் தாயகம் வந்து திரும்புவர். ஜாதகத்தில் நடப்பு மகாதிசாபுத்தி நன்றாக இருப்பின் வாகன யோகத்தை நாடுங்கள். சிலருக்கு முறை தவறிய காதலும் வயோதிபத்தில் திருமணமும் தத்துப்புத்திர யோகமும் கிட்டலாம். சுரண்டல் மூலம் பணம் கிடைக்கலாம்.



**5.சிங்கம் (மகம்,பூரம்,உத்திரம் 1)**

குருபகவான் நாலாமிடத்தில் வந்துற்ற காலை தர்மபுத்திரர்கள் வனவாசஞ்செய்ய வெளிக்கிட்ட கதையை மறக்கவேண்டாம். பயண முயற்சிகள் இடைத்தங்கல் நாட்டில் சேர்த்து விடலாம். காதலனைக் கைவிட்டுப் பெற்றோர் விரும்பியவரைத் திருமணம் செய்தல், சம்சாரத்துடன் பிணக்குகள் ஏற்பட்டு மணவிலக்கு நேரிடலாம். எதிரிகளின் அடாவடித்தனத்தினால் மனநிம்மதி பறந்துவிடலாம். சம்பளம் போதாமையினால் தொழிலைக் கைவிட்டு தனித்தியங்கி வர்த்தக முயற்சிகளில் ஈடுபடல். சிலருக்குப் பரீட்சைப் பெறுபேறு பாதிக்கப்பட்டதினால் தற்கொலை எண்ணமும் ஏற்படாலாமெனினும் நண்பர்களின் புத்திமதியினால் வாழவேண்டும் என்ற வைராக்கியம் ஏற்படும். காணாமல் போனவர் உயிருடன் இருக்கின்றார் என்ற செய்தி கேள்வியுற்று ஆனந்தமடைதல்.



### 6.கன்னி (உத்தரம் 2,3,4, அத்தம், சித்திரை1,2)

வியாழபகவான் மூன்றாமிடத்திற்கு வருகை தந்த போது துரியோ தனன் முதலியோர் போரிலே மாண்டார்களாம். சிலருக்கு நோய் கார ணமாக தைரிய வீரியக்குறைவு ஏற்படலாம். பிள்ளைகள் விடுகின்ற தவறுகளை பவ்வியமான முறையில் கண்டித்துத் திருத்தப் பாருங்கள். சுற்றாடலை விரும்பாதபடியினால் தீர்மானித்த காணியைக் கைவிடல். தண்ணீர் தத்தில் எச்சரிக்கையாக இருக்கவும். சிலருக்கு டெங்கு நோய் பாதிப்பு ஆபத்தினைக் கொண்டு வரலாம். கைலஞ்சம் கோரி சிறைக்கம்பிகளை எண்ணும் நிலைக்குத் தள் ளப்படலாம். உற்சவ காலங்களில் ஆபரணங்கள் திருடர் வசப்படலாம். தடுக்கப்பட்ட விலங்குகளை வேட்டை ஆடுவதினால் சட்டத்தின் பிடியில் அகப்படலாம். பழைய வாகனத்தை புதிது போல் வர்ணந்தீட்டி விற்க முயல்வோரில் எச்சரிக்கையாக இருக்கவும். வெளியூர் பயணமுண்டு.




### 7.துலாம் (சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 2,3)

ஜென்மத்து வியாழன் நீங்கிவிட்டது. இனி ஆனந்தம் தான். போட்ட திட்டம் வெற்றிக்கு மேல் வெற்றியைத் தரும். பல்வேறு காரணங் களினால் இழுபட்ட திருமணம் அந்த மாதிரிக் கைகூடும். பங்குத் தொழி லைக் கைவிட்டு தனித்தியங்கப் பாருங்கள். கடன்தொல்லைகள் அகன்றுவிடும். பொருட்கொள்வனவிற்காக அடிக்கடி உள்ளூர் மற்றும் தென்னிந்தியப் பிரயாணம் ஏற்படும். காதல் மலர்ந்து திருமணத்தில் முற்றுப் பெறும். குழந்தைப்பேற்றுக்காகச் சிலர் தமிழ்நாட்டு வைத்தியமனைகளுக்குச் செல்வர். நோய் தீர தெய்வத் தலங்களுக்கு விஜயம்செய்வர். பெற்றோரின் திதிகளைச் செய்து அதிர்ஷ்டத்தை அனுபவிப்பர். நீண்ட நாட்களுக்குப் பின்னர் சொந்த மனையை அடைவர். எதிரிகளைக் கண்டும் காணாமல் செல்வதினால் முரண்பாடுகளிலிருந்து விலகி விடலாம்.



### 8.விருச்சிகம் (விசாகம் 4, அனுசம், கேட்டை)

சீதாப்பிராட்டியாரைச் சிறைப்படுத்திய ஜென்ம வியாழன் வருகின் றார். ஆடவர் மற்றும் பெண்கள் பழக்கமில்லாத இடங்களுக்கு புகைப் படக் கருவிகளைக் கொண்டு சென்று ஆபத்தில் சிக்கிவிடாதீர்கள். பிராணிகளின் தாக்கத்தில் எச்சரிக்கையாக இருங்கள். வாக னங்களின் போட்டா போட்டி உயிராபத்தைக் கொண்டு வரலாம். புதியன கொள்வனவு செய்யும் வேளை காலாவதி திகதி மற்றும் நம்பகத்தில் கண் வையுங்கள். சிலருக்கு கள்ள நோட்டுக்கள், முலாம் பூசிய ஆபரணங்கள் திணிக்கப்படலாம். முன்பின் அறியாதோரை வீட்டுக்கு எடுக்கவேண்டாம். வாகனசாரதிப்பத்திரங்களின் காலா வதித் திகதி முடிந்தமை தண்டத்தைக் கொண்டு வரலாம். மாற்றுப் பயிர்ச்செய்கையில் ஈடுபட ஆர்வம் பிறக்கும். சிலருக்கு சிறைக்கதவுகள் திறக்கப்படலாம். பிள்ளைகளின் அழைப்பின் பிரகாரம் தம்பதிகளுக்கு வெளியூர் செல்லும் யோகமுண்டாம். காலசர்ப்பதோஷம், நாகதோஷம் குருசண்டாளதோஷம் நீங்க நாகவிளக்கு எரித்து வழிபட்டு வர திருமணமும் பிள்ளைப் பாக்கியமும் கிட்டும்.



**9.தனுசு (மூலம்,பூராடம்,உத்தராடம் 1)**

ஏழரைச் சனி நடக்கின்ற உங்களுக்கு இராவணன் முடியை 12 ம் இடத்து வியாழன் வீழ்த்திய துன்ப துயரங்கள் ஏற்படலாம். தெய்வ நம்பிக்கையை கைவிட வேண்டாம். சமூகத்தின் வெறுப்பான பார் வைக்கு நீங்கள் ஆட்படலாம். செய்யுந்தொழிலை உயிரினும் மேலாகப் பேணவும். உடையவன் பாராவிட்டால் ஒரு முழம் கட்டை என்பதை மறக்க வேண்டாம். பரீட்சையில் சாதனை புரிய மாணவர்கள் சகபாடிகளின் உறவைக் கைவிடுங்கள். வலது குறைந்தவர்களை உங்கள் பிள்ளைகள் போல் ஏற்றிப் போற்றி தேவையான உதவிகளைச் செய்து அவர்களின் அன்பைப் பெறுங்கள். வாஸ்து சோதிட முறையில் மனையைத் தெரிவு செய்து நிர்மாணியுங்கள். பழைய ஒப்பந்தங்கள் இலாபந்தந்தால் புதியதில் மனம் வையுங்கள். இயன்றவரை இரவுப் பயணங்களைக் கைவிடுங்கள். 7 1/2ச் சனிக்கு சனிவிரத வழிபாட்டுடன் ஆஞ்சநேயரையும் வணங்குவதுடன் தெட்சணாமூர்த்திக்கும் அர்ச்சனை வழிபாடு செய்து குருவின் திருவருளைப் பெற்று இன்னல்களைப் போக்குங்கள். சிலருக்கு எதிர்பாராத அதிர்ஷ்ரம் ஏற்படலாம்.



**10.மகரம் (உத்தராடம்2,3,4, திருவோணம், அவிட்டம் 1,2)**

ஏழரைச்சனி நடைபெறும் உங்களுக்கு குருபகவானின் 10ம் இடத்து நிலைப்பாடு நீங்கி 11 ம் இடத்துக்கு வந்து மனம் போல இன்ப சுகங்களையும் வெற்றியையும் அள்ளித்தரப் போகின்றார். இதுவரை காலமும் ஏற்பட்ட தடைகள் தாமதங்கள் குறுக்கீடுகள் யாவும் தவிடுபொடியாகி வெற்றிக்கம்பத்தை அடைய வைக்கும் நிலைக்கு வியாழன் உங்களைக் கொண்டு வருவார். சனியின் ஆட்சிவீடாக மகரம் இருப்பது பழம் நழுவிப் பாலில் விழுந்ததைப் போல பிறர் போற்றும் நிலைக்கு உயரப் போகின்றீர்கள். தயக்கமின்றி காலை முன் வையுங்கள். ஏணிப்படிகள் போல படிப்படியான முன்னேற்றம் வந்து கொண்டே இருக்கும்.



**11. கும்பம் (அவிட்டம்3,4, சதயம், பூரட்டாதி 1,2,3)**

சிவபெருமானையே மண்டையோட்டிலே பிச்சையேந்த வைத்த குரு பகவான் 10 ஆம் இடக் கோசாரத்திற்கு 4.10.2018 தொடக்கம் ஒரு வருடம் வரை வருகின்றார். தொழிலை மிகக் மிகக் கவனமாகப் பேணவும், மேலதிகாரிகளுக்கு அள்ளி வைத்து இலாபம் பெற முயற்சிப்பார்கள். வெளியூருக்கு அழைத்துச் சென்ற முகவர் இடை நடுவில் உங்களைத் தவிக்க வைத்து விடலாம். பெற்றோருடன் பிள்ளைகள் முரண்பட்டு, சிலர் மனையை விட்டு வெளியேறியும் விடலாம். பரீட்சை முடிவுகள் பாதக நிலையைக் கொண்டு வரலாம். புதியன கொள்வனவில் எச்சரிக்கையாக இருக்கவும், வங்கிக்கு பணம் கொண்டு செல்கையில் பாதுகாப்பில் அதி தீவிர கவனம் எடுங்கள். முதியோர் தனித்து வீட்டில் இருப்பதைக் கைவிடவும்.

### 12. மீனம் (பூரட்டாதி 4, உத்தரட்டாதி, ரேவதி)

ஆண்டவரே! அட்டமத்து வியாழன் (8) நீங்கியது நொந்து துவண்ட நூலாய் போயிருக்கும் உங்களுக்கு ஆறுதலாகும். ஒன்பதாம் கோசர நிலையில் இனி வந்துள்ள வியாழன் பல துறைகளிலும் உங்களை ஏற்றி வைக்கப் போகின்றார். ஓடிப் போனவருக்கு ஒன்பதாம் வீட்டு வியாழன் என் பார்கள். வெளிநாட்டுக்குச் செல்லும் வாய்ப்பினைக் கைவிட வேண்டாம். பணக் கஷ்டத்தினால் இடை நிறுத்தப்பட்ட திருமணம் மீண்டும் வெற்றியைக் கொண்டு வரும். அரசு தனியார். துறைகளில் வேலை வசதிகளும், பரீட்சைச் சித்தியினால் தொழில் முன்னேற்றமும், புலமைப்பரிசிலும் கிட்டலாம். சட்ட விரோத மின்சார பாவனை பற்றி எச்சரிக்கையாய் இருங்கள். தடுப்பினின்றும் சிலர் வெளிவருவர். கடமையினின்றும் தவறியவர் என்று சிலருக்கு குற்றம் சுமத்தப்படலாம். ஆண்டவனை மறந்தாலும் பிரயாணத்தின் போது ஆவணங்களை கொண்டு செல்ல மறக்காதீர்.

---

## அன்பான வாசகர்களே!

வலு இதழினை சந்தாமுறையில் பெற்றுக்கொள்ள விரும்பின் பெயர் முகவரி தொலைபேசி இலக்கம் என்பவற்றை எழுதி எமக்கு அனுப்பி வையுங்கள். நாம் உங்களுக்கு சந்தா விண்ணப்பப்படிவத்தை அனுப்பி வைப்போம். அதனைப் பூர்த்திசெய்து அனுப்புவதனூடாக வலு இதழ்களைத் தொடர்ச்சியாகப் பெற்றுக்கொள்ள முடியும்.

## அன்பான வாசகர்களே!

மாற்றுத்திறனாளிகள் தொடர்பானதும் மற்றும் தன்னம்பிக்கை தரக்கூடியதுமான கவிதைகள் சிறுகதைகள் என்பவற்றை வலுவிற்கு அனுப்பிவையுங்கள். தரமான ஆக்கங்கள் வலுவில் பிரசுரமாகும். தரமானவற்றிற்குத் தகுந்த சன்மானம் வழங்கப்படும்.


ஸ்ரீ நிகேத பவன்
சைவ உணவகம்
ஸ்ரீ நிகேதபவன்
சைவ உணவகம்
SHRINIGETHABHAVAN VEGETARIAN RESTAURANT
அறு சுவைமிக்க
மதிய உணவு
மற்றும் சிற்றுண்டி
வகைகள்
163 மின்சார நிலைய வீதி,
(யாழ்.மத்திய பஸ் தரிப்பு
நிலையத்திற்கு முன்பாக)
யாழ்ப்பாணம்.


சாரங்கா
MONEY
EXCHANGE
All Countries
021 222 8869
அரச அங்கீகாரம் பெற்ற
வெளிநாட்டு நாணயமாற்று நிறுவனம்
WESTERN UNION WU
021 221 7007
இல. 157/1. கஸ்தூரியார் வீதி.
யாழ்ப்பாணம்.


AnnA
1969
இல்லத்தரசிகளின்
ஒப்புயர்வற்ற தேர்வு
அண்ணா
மிளகாய் தூள், கறித்தூள், மஞ்சள் தூள்,
மல்லித்தூள், சரக்குத்தூள்,
அரிசிமா மற்றும் பல....
அண்ணா தொழிலகம்
இணுவில் தெற்கு, இணுவில்.
ஐந்து சகாப்தத்திற்கு மேலாக மக்களின் அபிமானத்தைப் பெற்றது....


கருவி சைன்
திரவ சலவை சவர்க்காரம்
4in1
கருவி
Shine
Detergent Liquid
500ml
4in1
கருவி
Shine
Detergent Liquid
300ml
கருவி சைன்
4in1
சிறப்புக்கள் !
தரமான உற்பத்தி
நீண்டகாலப் பாவனைக்கும் , நறுமணத்துக்கும்
சாதாரண மற்றும் இயந்திர சலவைக்கு
மாற்றுத்திறனாளிகள் வாழ்வாதாரத்தைப் பேண



"வளமான வாழ்வுக்கு வழிகாட்டும்"
உங்கள் மனம் போல்
மாங்கல்யம்
அமைந்திட
இமயம்
திருமண சேவை
உங்களுக்கு ஏற்ற
தகுந்த வரன்
வேண்டுமா?
எம்மிடம்
உள்நாட்டு, வெளிநாட்டு
அரச, தனியார்,
வரன்களின் ஜாதகங்களைப்
பெற்றுக் கொள்ளலாம்!
பதிவுக் கட்டணம்
எதுவும்
அறவிடப்படமாட்டாது
நேரில் வரவேண்டும் என்ற அவசியம் கிடையாது
வீட்டில் இருந்தவாறு எம்மை அழையுங்கள்
வடலியடைப்பு, பண்டத்தரிப்பு,
யாழ்ப்பாணம், இலங்கை.
imayammatrimony@gmail.com
+94214343129
+94777243129
+94777111403
எவகிறீன் அச்சகம், இல. 693, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம். 021 221 9893